REGISTERED No. M. 1434. தனிப்பிரதி அணா 2.

# THE NADAR KULA MITRAN.

[அருப்புக்]கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று
வெளிவரும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

[நாடார்குல மித்திரன்]
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ3-8-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0.
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4 ] துந்துபிஸ்ரீ பங்குனிமீ 8உ புதன்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஸ்ரீ மார்ச்சுமீ 21உ [ இதழ் 21.

## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல் — இனிய நாவல்

மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும். பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும், மற்றோரும் கவிந்து கொண்டாடப்பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

---

இனாம்! — இனாம்!!

## பெருங்காயம் செய்யும் முறை.

எமது மல்லிகா ஆயில் என்னும் சிறந்த கூந்தல் தைலம் 3 பாட்டல் வாங்குபவர்களுக்கு டை பெருங்காயம் செய்யும் முறை இனாமாய் அனுப்பப்படும். இம் முறையைக்கொண்டு ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி பெருங்காயம்செய்து, விற்பனை செய்வதால் சுகஜீவனம் செய்யலாம். மல்லிகா ஆயில் 3 பாட்டல் விலை ரூ 2. தபால் செலவும் இனாம்.

K. N. S. & Co,
ARIMALAM.

---

## ஜீவகாருண்யர்.

### மஹாசந்தனாதித் தைலம்.

இது சாஸ்திரோக்தமாய்ச் செய்தது சகல வியாதிகளையும் கண்டித்து தேகபலமும் தேககாந்தியும் தரும்.

புட்டி 1-க்கு ரூ 1—8—0.

ஜீவகாருண்ய வைத்தியசாலை,
மந்திதோப்பு,
கோவில்பட்டி S. I. R.

## விளம்பரம்.

பல்போனவர்களுக்கு புதிய பல் கட்டுவதல்லாமல் பல்சம்பந்தமான இதர சகல வியாதிகளுக்கும்தகுந்தவாறு மருந்து கொடுக்கப்படும். சார்ஜ விபரம் நேரில்.

விலாசம்:—
P. M. ஆப்ரகாம்,
அப்பாசாமி நாயக்கர் [illegible]
வடக்குமாசி வீதி மதுரை.

---



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகளுக்கு தகுந்த வசதியில்லையென பலரால் சொல்லக்கேள்விப்பட்டு சௌகரியத்தை நா விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ா-ா-ஸ்ரீ ஜனம் F. S பெரையா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் [illegible] உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் } எஸ். எஸ். கருப்பையா நாடார்,
விருதுபட்டி. } எஸ். ராமசாமி நாடார்

---

புதியசாலை! — புதியசாலை!!

நாடார்குல மித்திரன்

## புத்தகசாலை.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

| | |
|---|---|
| அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—8—0 |
| சௌந்திரகாந்தி நாவல் | 0—12—0 |
| அஸரியா நாடார் போட்டோ படம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—6 |
| நடராஜப் பதிகம் | 6—1—6 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—6 |
| செல்வாசக் கீர்த்தனை | 0—3—0 |
| நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி | 0—4—0 |
| 5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |
| விகட வேசிகர்மாலை | 0—1—6 |

குறிப்பு:—8-அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும். விலாசம்:—

நாடார்குல மித்திரன் "புத்தகசாலை"
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

---

இனாம்! இனாம்!!

படுக்கை அறையின்

அழகிய லீலா விநோத

## போட்டோ

படங்கள்.

இருவருக்கும் ஆச்சரியமான சந்தோஷ சந்தோஷ சல்லாபங்களை யுண்டாக்கி ஆனந்தமயமாகச் செய்யும்.

| | | |
|---|---|---|
| ½ | டஜன்——விலை. | 2—8—0 |
| 12 | படங்கள்—, , | 4—8—0 |
| 24 | , , , , | 8—0—0 |
| 36 | , , , , | 10—0—0 |

எமதுவிலாசம்—
எம். ஜி. ராஜன் & கம்பெனி
74. திருப்பள்ளி தெருவு,
சௌக்கார்பேட்டை, மதராஸ்.

---

புதிய இங்கிலீஷ்

## சம்பாஷணைப் புஸ்தகம்.

மூன்றுமாத காலத்திற்குள் இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம். மூன்று பாகங்களடங்கியது. இங்கிலீஷ் வாக்கியங்களுக்கு தமிழ் அர்த்தத்துடனும், ஒவ்வொ[illegible] அப[illegible] [illegible]லெ[illegible]றன. புதிய போதனைமுறைகளை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. இம் மூன்று புத்தகங்களையும் படித்தால் 4-வது பாரத்தில் படிக்கும் மாணவர்களைவிட அதிகமாக இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம். 1-ம் பாகம் விலை அணா 6, 2-ம் பாகம் அணா 8, 3-ம் பாகம் அணா 10. ஒவ்வொன்றுக்கும் வி. பி. செலவு அணா 6. பிரத்தியேகம். மூன்று புத்தகங்களும் ரூபாய் 1—2—0 க்கு வி. பி. யில் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், திருநாவுக்கரசு பிரஸ்
ஆரணி. N. A. Dt.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## ஸ்ரீ கிருஷ்ண லீலை.

(வீரமாமுனி எழுதுகிறார்.)

(முன் தொடர்ச்சி.)

### துயில் கவர்ந்தது.

சூரிய பகவான் தனுராசியிற் பிரவேசித்து வாடைக் காற்றுக் குளிர்ந்து வீசி ஆகாயத்தில் சந்திரன் பிரகாசமாய்த்தோன்றி வெகு ரம்மியமாய்த் தோன்றுமிந்தக்காலத்தில் கோகுலத்திலுள்ள ஆயர்கள் யாவரும் தங்கள் வம்சங்களும் பசுக்களும் க்ஷேமமடையும் பொருட்டு தங்களுடைய குலதருமப்படி அவரவர்கள் வீட்டிலிருக்கின்ற கன்னியா ஸ்திரீகளை நியமித்து அவர்களைக் கொண்டு தங்கள்குல தெய்வமாக விளங்குகின்ற கௌரிதேவியைக்குறித்து விரதங்களை அனுஷ்டிப்பிக்கின்றது வழக்கமானபடியால் அவ்வருஷத்திலும் தனுசு மாதத்தில் முதல்தேதி முதல் முப்பது தேதிவரைக்கும் விரதமனுஷ்டிக்கும்படியாய் நந்தகோபர் உத்திரவிட்டார்.

அப்போது கோபிகைகள் யாவரும் பகவானிடத்தில் பக்தியுடையவர்களாய் கிருஷ்ணபகவானை தங்களுக்கு மணாளனாக வரிக்கவேணுமென்று வெகுகாலமாய் மனதில் தியானித்துக் கொண்டிருக்கின்றவர்களாகையால், நல்ல சமையம் வாய்த்ததென்று சிந்தித்து ஸ்ரீ கிருஷ்ண குணகீர்த்தனங்களைச் செய்து கொண்டு காளிந்தி நதிதீரத்திற் சேர்ந்து தீர்த்தமாடி, அந்த நதிக்கரையில் திவ்யமான ஈரமண்ணைக் கூட்டி ஸ்ரீபகவதிதேவி ஸ்வரூபத்தை நிர்மித்து நானாவித அலங்காரங்களையும் மஞ்சள்ப் பொடியும் குங்குமங்களையும் வாசனைப் புஷ்பங்களையும் தூபதீபங்களையும் பலகாரவர்க்கங்களையும் கனிவர்க்கங்களையும் சோபசோபகாரங்களினால் சமர்பித்து மிகுந்த பக்தியுடன் கைகூப்பிக் கொண்டு எதிரில் நின்று தனித்தனியே பகவதி காத்யாயனி தேவி மகாமாயா மகாயோகினி-அதீசுவரி-கௌரி-பவானி-மகாதேவதேவி ஸ்ரீபுருஷோத்தமர் எங்களுக்கு நாயகராக அமையவேண்டும். உம்மைபால் தயிர் வெண்ணை மஞ்சள்பொடி முதலிய மங்களவாத்தியங்களால் சேவிக்கின்றோமென்று பிரார்த்தனை செய்து சங்கேதஞ் செய்து கொண்டு உபவாசர்களாய் தனுர்மாதம் முப்பது நாளும் கிரமமாக பஞ்சவுஷத காலத்திற்குமுன்வந்து அவரவர்கள் முற்றத்தில் அவரவர்தம் நாமதேயங்களைச் சொல்லி எழுப்பி அழைத்துக் கொண்டு யாவரும் தங்கள் தனபாரங்கள் அசைந்தாட இடை துவள மத்தகஜங்களைப்போலும் ராஜஹம்சங்களைப் போலும் ஒய்யார நடை நடந்து ஸ்ரீ கிருஷ்ண நாம சங்கீர்த்தனங்களைப்பாடிக் கொண்டு சந்தோஷமாய் ஒருவர்க் கொருவர் கைகளைக் கோர்த்துக்கொண்டு 'யமுனாநதி' தீரத்திற்கு வந்து மிகவும் பக்தியுடன் ஸ்ரீபத்திரகாளியைப் பூசித்து தங்கள் மாளிகையிற் சேர்ந்து ஹவிசுகளைப் புசித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதமாக முப்பது நாளும் விரதயாத்திரையாகச்செல்லும்போது கடைசிநாள் முன்போலவே கோபகன்னியா ஸ்திரீகள் யாவரும் ஸ்ரீ கிருஷ்ணகுணகீர்த்தனங்களைப்பாடிக் கொண்டு நதிச்சமீபத்திற்கு வந்து பரிசுத்தமான ஏகாந்தப் பிரதேசத்தில் தங்கள் விலையுயர்ந்த வஸ்திரங்களைக் களைந்து அடையாளமாகவைத்து பயமில்லாதவர்களாய் அம்மகாநதியில் இறங்கி ஸ்ரீஹரிரோஹரி யென்று பகவன்நாமங்களைத் தியானித்துக் கொண்டு ஸ்நானம் செய்து அர்தஜலமத்தியில் சரஸாநந்தத்துடன்கிருஷ்ணபகவானுடைய லீலாகுண வைபவங்களைப்பாடி இச்சவத்தைவாரி ஒருவர்க் கொருவர் ஜலவசந்தங்களாடி அடைதற்கரிய பகவத்குணரிசயங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச்சமையத்தில் சர்வலோகரட்சகரான ஸ்ரீகிருஷ்ணர் கோபிகைகள் தீர்த்தமாடுகின்ற வைபவங்களை அறிந்து தாம் வெகு தூரத்திலிருந்து ஏதோ ஒருகாரியார்த்தமாய் வருகின்றவரைப்போல் தன்னுடன் கூடவந்தவர்களை கண்சாடைகாட்டி ஒரு பிரதேசத்தில் சந்தடிசெய்யாமலிருக்கச் செய்து தாம் மட்டும் தனியாகப் புறப்பட்டு சந்தடிசெய்யாமல் அங்நங்கு ஒழிந்து மெதுவாய் மறைந்து, தாமே களைந்துவைத்தவரைப்போல் எல்லா வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு உடனே களைத்து மதயானையைப்போல் கம்பீரமாக நடந்து விடபுருஷனைப்போல் அந்த வஸ்திரங்களை யெல்லாம் கைகளில்ச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு தமது லீலைக்கனுகுணமாய் ஒத்தபருவங்களையுடைய இந்தகோபகன்யாகுமரிகளைப் பார்த்து ஏளனமாகிய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு அந்நதிக்கரையில் தழைத்து புஷ்பித்து விருத்தியடைந்திருக்கின்ற ஒரு கடம்பவிருட்சத்தின்மீது தாவிஏறி அதன்மீது இவ்வஸ்திரங்களை வைத்து தாம் அவ்விருக்ஷத்தின்மேல் நின்று அதன் பூர்வகர்மபாவத்தை நீக்கி பரிசுத்தஞ் செய்து மோக்ஷத்திற்குக் காரணமாகும்படி கிருபைசெய்தார். அத்தருணத்தில் அந்தச்சுந்தரவதிகள் கழுத்தளவு ஜலத்திலிருந்து ஸ்ரீபகவானுடன் சுகுமாரமாக வசனிக்கலாயினர்.

எமதுயிற்குயிரான ஸ்ரீ முத்துகிருஷ்ணபகவானே! நீரிந்தவுலகத்தி லவதரித்து எங்கள் மனதை யபகரித்ததுமன்றி எங்களுடைய மர்மாவயவமான தனங்களையும் அபகரிப்பது தர்மமோ! ஈதென்ன ஆச்சரியம் நாங்கள் களைந்து வைத்தவிழுப்பு வஸ்திரங்களை ஸ்பரிசித்து அவர்றைச் சுமந்து செல்லக் கூடுமோ! உமது கிருபையினால் எங்களை அடிமை யாக்கிக் கொண்டு எங்கள் இஷ்டங்களை தீர்க்கும்படியான அம்மான் மகனாகிய மைத்துனனாகவே யிருக்கிறீர். இப்போது மன்னித்து வஸ்திரங்களை கிருபையோடு கொடுத்து எங்கள் மானதனங்களை நிலை நிறுத்தி ரட்சிக்கக்கடவீர் என்று பிரார்த்தித்தார்கள். பின்னும், ஸ்ரீ கோபாலகிருஷ்ணனே மிகவும் பேதைகளாகிய எங்களையொத்த ஸ்திரீ ஜனங்களுக்கு வசியராய் நாங்களிட்ட வழக்குக்குறியராய் எங்களுக்குப் பணிசெய்யவோ அறிகிலோம் இவ்வளவு பெருமை வகித்தது போதும் கிருபை செய்து எங்கள் கலைகளைத்தருவீரென்று வேண்டிக் கொண்டார்கள். பின்னும் பக்தவத்சலனாகிய ஸ்ரீ கிருஷ்ணனன்றுயிருந்தது நீசுலபனாய் முன்னமே எங்கள் மனதையபகரித்தாய். கிரக்கிரமமாய் எங்கள்மர்மாவயவமான தனங்களையும் சுபாவதர்மங்களாகிய நாணங்களையும் வஸ்திரங்களையும் அபகரித்ததுமன்றி எங்கள் சர்வேந்திரங்களையும் உமக்கு அடிமையாக எடுத்துக் கொண்டாய் பின்பு இன்னமும் என்ன செய்வாயோ வென்றார்கள். பின்னும் பலவாறு ஸ்ரீகிருஷ்ண குணங்களையே புகழ்ந்து, முக்குணங்களையு மடைந்து சோதிமயமாகவும் ஏகமாகவும் விளங்குகின்றாயென்று நாங்கள் கேள்விப்பட்டு உன்னையே பர்த்தாவாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நீ மகாமாயாவியாய் விசித்திர லீலாதிசயங்களை அநுஷ்டித்துக் கொண்டு பல மூர்த்தியாய் நானாவிதஜாடைகளை வகித்து ஒருவராலும் இப்படிப்பட்ட தன்மையுடையவரென்று அறிதற்கரியவனாகியும்சற்றுநேரமும் ஒழிவில்லாமல், வியாபித்து சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற உன்னுடைய வல்லமைக்கு எங்கள் மனதை சோதிப்பது தருமோ தயவு செய்து உமது கடாட்சத்திற்கு பாத்திரராகிய எங்களது வஸ்திரங்களை கொடுத்தருள்வாய் பிரபுவே, என்றார்கள்.

(இன்னும் வரும்.)

## ரேடியோ டெலிபோன்.

ரேடியோ டெலிபோன் என்பது கம்பியில்லாமல் வாயினால் பேசுங் கருவியாகும். இதில் இப்பொழுது ஒரு புதுமை அமெரிக்கா தேசத்தில் கையாளப்படுகிறது. முதலில் அதைப்பற்றிச் சொல்லுமுன் கம்பியில்லாத தந்தி கண்டுபிடித்ததைப்பற்றி சில விவரங்களைச் சொல்லுவோம். மார்க்கோனி என்பவர்தான் முதலில் கம்பியில்லாமல் தந்தியனுப்புகிறதை 1896-ம் வருஷத்தில் கண்டுபிடித்தார். இரண்டு வருஷங் கழித்து இங்கிலாந்திலுள்ள 'ஆலம்பே' 'பானிமௌத்' என்கிற 14½ மைல் தூரமுள்ள இரண்டு இடங்களுக்கும் மார்கோனி கம்பியில்லா தந்தி ஏற்படுத்தினார். 1899ம் வருஷத்தில் 30-மைல் தூரமுள்ள இங்கிலாந்திலுள்ள சௌத் போர்லாண்டிற்கும் பிரான்ஸிலுள்ள விமெரக்ஸ் என்ற ஊருக்கும் ஏற்படுத்தினார். அச்சமயம் நிமிஷத்தில் 2-முதல் 30 வார்த்தைகள் வரை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பின்பு ஜாஸ்தி மைல் தூரங்களுக்கு அனுப்ப முயற்சி செய்து 1901-ம் வருஷத்தில் லைஜார்ட், நிட்டன் என்ற 200 மைல் தூரமுள்ள இடங்களில் ஏற்படுத்தப்பட்டது. 1902ம் வருஷத்தில் ஆயிரக்கணக்கான மைல் தூரங்களுக்கு சமாச்சாரம் சமாச்சாரம் அனுப்பும்படி செய்ய சாத்தியமாயிற்று. 1907ம் வருஷத்தில் அயர்லாந்திலும் அமெரிக்காவிலும் 2 ஸ்டேஷன்கள் ஏற்படுத்தப்பட்டு பத்திரிகை சமாச்சாரங்களையும் மற்றச்செய்திகளையும் அனுப்ப ஆரம்பித்தார்கள். பின்பு கம்பியில்லாத டெலிபோன் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது. 1907-ம் வருஷத்திலேயே டிபாரஸ்ட் என்பவரால் கம்பியில்லா டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் அநேக முயற்சிகள் செய்தபின்பு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்புறம்இருப்பவர்களுடன் பேசுவதற்குச் சாத்தியமாயிற்று. 1915-ம் வருஷத்தில் அமெரிக்காவிலிருந்து பிரான்ஸுடன் பேசுவதற்குச் சாத்தியமாயிற்று. இப்பொழுது இதில் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அமெரிக்காஐக்கிய மாகாணத்தில் மட்டும் சுமார் 20,000 ரேடியோ ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இவைகளில் 274 பிராட்காஸ்டிங் ஸ்டேஷன்கள் உண்டு. ரேடியோ டெலிபோனில் இப்பொழுதுள்ள புதுமையென்னவென்றால் இந்த பிராட்காஸ்டிங் ஸ்டேஷன்கள்தான். பிராட்காஸ்டிங் ஸ்டேஷன் (Broad costing station) என்றால் சப்தங்களை ஆகாய மூலமாக அனுப்புவதாகும். இப்படி ஆகாயமூலமாக நாலா திசைகளுக்கும் அனுப்புவதினால் சமீப தூரத்தில் அதாவது சுமார் 500 மைல்களுக்குள்ளாக இருப்பவர்களுக்கு அதை அறியவேண்டியதற்காக சிறு யந்திரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் பெயர் ரேடியோ ரிஸீவிங் செட் (Radio Receiving Set) இதனுடைய கிரயம் 30 ரூபாய் முதல் 400 ரூபாய் வரையிலுமிருக்கிறது. பிராட்காஸ்டிங் ஸ்டேஷன்கள் ஐக்கியமாகாணத்தில் அநேக இடங்களில் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் முன்னாடியே பத்திரிகைகளில் புரோகிராம் பிரசுரித்து விடுகிறார்கள். இன்ன இன்ன நேரத்தில் இன்ன இன்ன சமாச்சாரங்கள், சங்கீதங்கள், பிரசங்கங்கள் முதலியவை அனுப்பப்படுமென்று பிரசுரித்து விடுவதால் ரிஸீவிங்செட் வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும்தங்கள்வீடுகளிலிருந்த வண்ணமே குறிப்பிட்டநேரங்களில் ரிஸீவிங் செட் மூலமாக சங்கீதத்தையோ, பிரசங்கங்களையோ, சமாச்சாரங்களையோ கேட்டு அறிந்துகொள்ள முடிகிறது. இது மிகவும் ஆச்சரியமான சம்பவமேயாகும் பிராட்காஸ்டிங் ஸ்டேஷனில் ஒரு தனி அறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குள்ள ஒரு இயந்திரத்திற்கு நேராக நின்றுகொண்டு, பாட்டோ, பிரசங்கமோ செய்தால் அவைகள் கம்பிமூலமாக மற்றொரு அறைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து ஆகாயமூலமாக அனுப்பப்படுகிறது. பேசுகிறஅறையில் எதிரொலி கிளம்பாதபடி தரையிலும் சுவர்களிலும் துணிகள் போடப்பட்டிருக்கிறது. ரிஸீவிங்செட் வைத்திருப்பவர்கள் தங்கள் வீடுகளில் இரண்டு கம்பங்கள் 5' இடையிருக்கும்படி நாட்டி அந்த இரண்டு கம்பங்களுக்கும் கம்பிகள் போடப்பட்டு அதிலிருந்து ஒரு கம்பி மாட்டி வீட்டிற்குள்ளிருக்கிற ரிஸீவிங்செட்டில் மாட்டி விடுவார்கள். ஆகாயத்தில் போகிற சம்தமானது இரண்டு கம்பங்களுக்கு மத்தியிலுள்ள கம்பிகள் மூலமாக ரிஸீவிங் செட்டிற்கு வந்து நன்றாய்ச் சப்தங்கொடுக்கிறது. இந்த விதமாக அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளில் எல்லாஜனங்களும் சுமார் 35 லக்ஷத்திற்கு மேல் ரிஸீவிங் செட் வைத்து உபயோகிப்பதாகத் தெரிகிறது. மீன்பிடிக்கச் செல்லுகிற படகுகளிலுங்கூட இதை ஏற்படுத்தி மீன்பிடித்துக் கொண்டிருக்கும் பொழுதே சங்கீதத்தையோ, பெரிய கனிதர்களின் பிரசங்கத்தையோ கேட்டு ரஸிக்கிறார்கள். பிராட் காஸ்டிங் ஸ்டேஷனிலிருந்து ஒருவர் லக்ஷக்கணக்கான அறிமுக மில்லாதவர்களுக்கு பிரசங்கஞ் செய்யவோ, பாட்டுபாடவோ சாத்தியப்படுகிறது. ஒரு நாடக சாலையில் நடக்கிற சங்கீதத்தை இம்மாதிரி அனுப்பவேண்டுமாகில் நாடகசாலையிலிருந்து பிராட் காஸ்டிங் ஸ்டேஷனுக்கு கம்பி மூலமாக சகல சப்தங்களும் வரவழைக்கப்பட்டு அங்கிருந்து ஆகாயத்தில் அனுப்பப்படுகிறது. பிராட் காஸ்டிங் ஸ்டேஷன்கள் அமெரிக்காவில் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. ஜனங்களுக்கும் சிறிய பையன்களுங்கூட ரிஸீவிங் செட் வாங்குவதற்கு ஆசை ஏற்பட்டுக்கொண்டு வருகிறபடியால் அங்குள்ள கடைகளில் இப்பொழுது பிரதானமாக ரேடியோ ரிஸீவிங் செட்டுகளும் அது சம்பந்தமான சாமான்களுமே ஜாஸ்திவிற்பனையாகி வருகிறது. வீட்டிலுட்கார்ந்த வண்ணமாக அயலூரில் நடக்கிற சமாச்சாரங்களையும் மார்கட்நிலவரங்களையும், காலநிலையையும், தேர்ந்த வித்வான்களின் சங்கீதங்களையும், மேதாவிகளின் அருமையான உபந்நியாசங்களையும் கேட்க யாருக்குத்தான் பிரியமிருக்காது? நமது தாய் நாட்டில் அம்மாதிரி எப்பொழுது காலம் வருமோ?

த—நா.

## சுதந்திரக்கோட்டை.

### நாடார்களின் மத்தியகாலம்.

குலவித்தை கல்லாமல் பாதிவருவது இயற்கையானதால்; பாண்டிய நாட்டில் நாயக்கர் அரசாக்ஷி ஏற்பட்டு தேசத்தையும் ஆலயப் பிரவேசத்தையும் இழந்த நாடார்கள் தங்கள் ஜாதியார்களுக்குத் தனியே ஆலயமும் ராஜாங்க நிர்வாகமும் (உறைவின்முறை) ஏற்படுத்திக்கொண்டார்கள். ஜீவனார்த்தமாகச் சிலர் வியாபாரத்தையும் சிலர் விவசாயத்தையும் கைகொண்டார்கள். அது இரண்டும் செய்வதற்கு அறிவும்செல்வமும்ஆற்றலுமில்லாத மிகச் சிலர் 100க்கு 6-பேர் கள்ளிறக்கும் தொழிலில் இறங்கி விட்டார்கள். (சமீப காலத்திலிருந்து அவர்கள் கள் இறக்குவதை விட்டுவிடுவது நாடார்களின் சாபம் விமோசனமாகிறதை காட்டும் அறிகுறியாகிறது.) சிலர் அன்னிய மதங்களில் புகுந்து விட்டார்கள். புகுந்தும் ஜாதிபேதமில்லாத இதரமதங்களிலும்ஜாதித்துவேஷம் கொழுத்துவிட்டெரிகிறது. அந்தோ! அங்கும் நாடார்களுக்கு விமோசன மில்லை. அவர்களை ஹிம்சிப்போர் உண்மையில் அம்மதங்களின் தத்துவங்களை அறிந்தவர்களாவென்றுகேட்கிறேன்? குடிகளிடம் வரிவசூல்செய்து தேசத்தைக்காப்பாற்றிக்கொள்ள தங்கள் வியாபாரத்திலும் மகமை என்னும் வரியேற்படுத்தி வசூலித்து தாங்களே பஞ்சாயத்து சபை ஏற்படுத்துவதும்; குற்றம் செய்வோரைத் தண்டிப்பதும், தங்களுக்கென்று ஆலயப் பிரதிஷ்டைசெய்யவும் இன்னும் சகல நிர்வாகமும் பிறர் உதவியின்றி தாங்களே நடத்துவதற்கனுகூலமாக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தி பலமான கட்டுப்பாடுசெய்துகொண்டார்கள். தற்காலத்தில் இந்தக் கட்டுப்பாடுகளில் சிறிது அதிகாரம் குறைந்திருக்கிறதே தவிர, பூரா உருவமும் அப்படியே இருக்கிறது. நாடார்கள் நடத்திவரும் ஜாதிய கட்டுத்தான் காங்கிரஸ் காரர்கள் செய்யவேண்டுமென்ற சொல்லிவரும் தேசியக்கட்டு. தேசியத் தலைவர்கள் நாடார்களோடு பழகிப் பார்த்தால் ஆங்கில அரசாக்ஷிக்குக்கப்பப்பணம்போல் வரிசெலுத்துவதைத் தவிர தாங்கள் நிர்மணத்திட்டம்பூராவும் அனுஷ்டானத்தில் நடத்திவருவதைக் கண்டுமகிழலாம் அதுதான் அவர்கள் குல தர்மமென்றும் நாடார்கள் சேராமல், பாண்டிய நாட்டில் காங்கரஸ் இயக்கம் சித்தி பெறாதென்று வெட்ட வெளிச்சமாக காங்கரஸ் வாதிகளுக்கு தெரிந்துபோகும். மற்ற ஜாதியார்களோடு சகல விஷயங்களிலும் கலந்துகொள்ளாமல் நாடார்கள் தனித்துப்போனதால், சில துவேஷக்காரர்கள் இதுதான் சமயமென்று நாடார்கள் தாழ்ந்த ஜாதியார் ஆனதால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்களென்று பொய்க்கதை கட்டி சில புஸ்தகங்கள் எழுதி ஊர்ஜிதப் படுத்தியும் விட்டார்கள். பாண்டிய நாட்டைத் தவிர மற்ற விடயங்களில் நாடார்களுக்கு ஆலய சமத்துவமிருப்பதே அவர்கள் கூற்று பொய்யென்பதற்கு சரியான அத்தாக்ஷி.

இந்தியாவில் ஆங்கில அரசாக்ஷி வலுக்க இந்தியர்கள் தங்கள் தேச ஆசாரம் நடைஉடை மதக்கோட்பாடுகளையும் அடியோடுவிட்டு மேனாட்டு நாகரீகத்தில் குருட்டுத்தனமாக மூழ்க ஆரம்பித்தார்கள். இதனால் இந்தியர்கள் தங்கள்பரம்பரையான ஆஸ்திக தருமத்தை விட்டு நாஸ்திகர்களாகி கட்டுக்குலைந்து உலக போகமே மோக்ஷமென்று பிதற்ற ஆரம்பித்தார்கள். இந்தக்கொள்ளை நோய்நாடார்களையும் விட்டுவிடவில்லை.

ஆனால், சுமார் 30 வருஷங்களுக்கு முன்; மிதமிஞ்சிய மதப்பற்றுள்ளவர்கள் தலைவர் பதவிக்கு வந்தவுடன் தங்கள்பின் சந்ததியார்களுக்கு மதப்பற்றை விருத்திசெய்ய மதக்கல்வியை பரவவழிதேடாமல் வெறும்மனே ஆலய நிர்மாணிப்பதிலேயே புத்தியை செலுத்திவிட்டார்கள். தாங்கள் ராஜ்ஜிய பரிபாலனம் செய்யும்போது நடத்திவந்த பிரமாண்டமான ஆலயத் திருப்பணிபோல் தாங்கள் தனித்திருக்கும்போதும் நடத்த ஆரம்பித்தால் இதா காரியங்களுக்குப் பணம்வேண்டியிருக்குமென்பதை மறந்துவிட்டார்கள். அந்தக் கஷ்டத்தில் பின் சந்ததியார் மாட்டிக்கொண்டது பின்வரப்போனவற்றால் தெரியும்.

சுதந்திரவாதி.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சட்டசபை.

## அதன் தேறுதல் விபரமும் நமது கடமையும்.

1920-ம் ஞு நவம்பர் மாதம் கடைசியில் நடந்த சட்டசபைஎலெக்ஷன்களைப் பற்றி நம் எல்லோருக்கும் ஞாபக மிருக்கலாம். அந்த எலெக்ஷன்களில் ஓட்டுபெற்று சட்டசபைகளின் அங்கத்தினராக நியமனம்பெற்றவர்கள் தான் இப்பொழுது நமது சட்டசபைகளின் அங்கத்தினர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். மூன்று வருஷம் வரையிலும் இவர்கள் இருப்பார்கள். அதன் பிறகு இந்த சட்டசபை கலைக்கப்படும். முன்போல் மறுபடியும் எலெக்ஷன்கள் நடத்தி அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இப்பொழுது நடந்துவரும் சபைகள் நமது ஜார்ஜ் மன்னரது சிறிய தகப்பனாராகிய கானாட் கோமகனால் 1920ம் வருஷக்கோடியில் திறக்கப்பட்டு நடந்து வருகிறது. அப்பெரியார் உறுதிகூறியவாறு சபைகள் செவ்வையாய் நடந்துவருவது தேச விருத்திக்கு ஒரு நல்ல அத்தாக்ஷி.

நாடார் ஓட்டர்கள் லக்ஷக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். திருநெல்வேலி மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் நாடார்கள் எவ்வளவோ கௌரவமும் செல்வாக்குமாக வாழ்ந்து வருகிறார்கள். இருந்துமென்ன? 1920ம் வருஷத்தில் நடந்த சட்டசபை எலெக்ஷன்களில் நம்மவர்கள் எத்தனை பெயர்கள், தெரிந்தெடுக்கப்பட்டார்கள்? ஒருவருமில்லை நமது காருண்ய கவர்ன்மெண்டார் நமது ஒத்தாசைக்கு வரவேண்டியதாயிற்று. ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் அவர்களை சர்க்கார்தரப்பில் நியமனம் செய்தார்கள். அவர் ஒருவர் நமது சென்னை சட்டசபையில் இருந்ததால் நமக்கு எவ்வளவு நன்மை நேர்ந்திருக்கிறதென்று நமக்கு எல்லோருக்கும் தெரியும். இனி வரப்போகும் எலெக்ஷன்களில்கூட சர்க்காரில் நமக்கு ஒத்தாசை செய்வார்களென்று நமக்கு பூரண நம்பிக்கைவைக்க ஹேதுவில்லை நமக்கும் போட்டியாக இன்னும் எத்தனையோ பேர்கள் கிளம்பி யிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் எல்லோருடைய பாத்தியா பாத்தியதைகளையும் சீர்தூக்கிப் பார்த்து நமக்கு அதில் ஏற்படும் பாகாசாரம் செய்வார்கள் என்பதை ஒருவரும் சந்தேகிக்க இடமில்லை. அப்படியேஅவர்கள் 1924-ல் கூடப்போகும் சட்டசபைக்குக்கூட நம்மவர் ஒருவரை நியமிக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் அது நமக்குக் கொஞ்சமும் போதாது. மேற்சொல்லிய திருநெல்வேலி மதுரை, இராமநாதபுரம் கோயமுத்தூர் இந்த ஜில்லாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதம பக்ஷம் ஒவ்வொருவர் நம்மவர் மெம்பராகவேண்டும். அப்படியானால் தான் ஜாதீயமேன்மைக்கிடந்த இடமுண்டாகும். ஆனதால் சென்றஎலெக்ஷன்காலத்திலிருந்ததைபோல் தூங்கிக்கொண்டிராமல் எழுந்திருந்து ஆகவேண்டிய காரியங்களை ஊக்கத்தோடும் கருத்தோடும் ஊன்றிப்பாருங்கள். போனதெல்லாம் போகட்டும் இனிமேலாவது தெரிந்துபாடுபட பிரயத்தனப்படுவோம். இந்தியாவின் பொதுக்காரியங்களைப் பற்றி கனம் வைஸ்ராய் (கவர்னர் ஜெனரல்) அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு (1) இந்தியா அஸெம்பிளி' (2)'ஸ்டேட்ஸ் கவுன்ஸில் என்னும் இரண்டு சபைகள் ஏற்பட்டிருக்கிறது இந்தச் சபைகளுக்கு வங்காளம் ஐக்கியமாகாணம் பஞ்சாப், பம்பாய், மதராஸ், பர்மா முதலியஎல்லாமாகாணங்களிலுமிருந்து அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

ஆனால் நமது சென்னை மாகாண சட்டசபையே நமக்கு அதிமுக்கியமானது. இந்த சபையில் தான் நம்மை பாதிக்கும் விஷயங்கள் அநேகம் தீர்மானத்திற்கு வரும். இந்தச்சபையில்தான் நமது பத்தியா பாத்தியதைகள் நன்கு விவரிக்கப்பட்டுப் பலர்முன் அரங்கேற்றும்படிக்குக் கொண்டுவரப்படவேண்டும். ஆனதால் இந்தச் சபையில் உங்களுடைய முழுகவனத்தையும் செலுத்துங்கள்.

இந்தச் சட்டசபைக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பதற்கு எலெக்ஷன் நடக்கும்பொழுது நாம் கவனமாயிருந்து நம்முடைய ஓட்டுகளையும் நமக்கு அநுகூலமாயிருக்கும் மற்றவர்களின் ஓட்டுகளையும் சிதறிச் சிதைத்துவிடாமல் பாதுகாப்போமானால் கட்டாயம் இந்தச் சபையில் நம்மவர் அநேகர் அங்கத்தினர்களாயிருந்து நமக்காகப் பாடுபடுவதை நம் கண்ணாரக்கண்டு காதாரக்கேட்டு வாயாரவாழ்த்திஇன்புற்றுவாழலாம். அதற்கு என்ன செய்யவேண்டு மென்று நீங்கள் கேட்கலாம். நம்மவர்களில் ஓட்டுக்கொடுக்குப் பாத்தியதை யார்யாருக்கு உண்டு? அப்படி பாத்தியதை யுள்ளவர்கள் எத்தனைபெயர் சர்க்கார் கணக்குகளில் தாக்கல் செய்யப்பட்டு வருகிறார்கள். தாக்கலாகாமல் எத்தனைபெயர் இருக்கிறார்கள்? என்று ஒவ்வொருகிராமாந்திரங்களிலும் நாம்செவ்வையாய் அறிந்துகொள்ளவேண்டும். பாத்தியதை இருந்தும் சர்க்கார்க்கணக்குகளில் என்தாக்கலாகவில்லை என்று அறிந்து அவர்களை மேற்படி கணக்குகளில் தாக்கல் செய்வதற்கு வேண்டிய பிரயத்தனப் படவேண்டியதுதான் நாம் செய்யவேண்டிய முதல் வேலை.

சர்க்காருக்குவருஷத்தில் பத்துரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்களுக் கெல்லாம் ஓர் ஓட்டுக்கொடுக்கும் பாத்தியதை உண்டு. சர்க்காரில் இருக்கும் கணக்குகளில் கிஸ்திசெலுத்துபவர்களின் பெயர்கள் அப்போதைக்கப்போது மாற்றப்படாமல் இருந்துவருவது பெரும்பாலும் வழக்கம். சில கிராமங்களில் மூன்று அல்லது நான்கு தலைமுறைகளாக பட்டாமாறுதல் இல்லாமல் சுமார் நூறு வருஷங்களுக்குமுன் இறந்துவிட்டவர் பேரில் பட்டா இருந்துவருவது சகஜம். எத்தனையோ வருஷங்களுக்கு முன் கிரையமான நிலங்களோ வீடுகளோ ரெவின்யூ கணக்குகளில் கிரையம் செய்தவர்கள் பேரிலேயே தாக்கலாகிக்கொண்டுவருவதும் சகஜம். சில கிராமங்களில்யாரோ ஒருவர் பெயரில் சில நிலங்கள் தாக்கலாகிவருகிறது அந்தநிலங்களை ஒருவர் அநுபவித்து கிஸ்தி முதலியவைகளும் செலுத்திவருகிறார். பட்டாவிலிருக்கும் பெயருக்கும் கிஸ்திசெலுத்துபவருக்கும் ஸ்நானப்ராப்திகூடக் கிடையாது. அந்தப் பட்டாவிலுள்ள நிலங்கள் எக்காலத்தில் எதற்காக அன்னவருடைய பெயரால் தாக்கலாயிற்று என்று அவ்வூரிலுள்ள பழுத்த கிழவர்களுக்கும் தெரியாது. மேற்கண்ட முறையில் யாருக்கு ஓட்டுரிமை கிடைக்குமென்று நினைக்கிறீர்கள்? அநேக வருஷங்களுக்கு முன் இறந்தவர் வந்து ஓட்டுசெய்யப் போகிறாரா? அப்படி இருக்கும் ஓட்டுகளெல்லாம் யாருக்கும் பிரயோஜனப்படாமல் கணக்குகளில் வருவதோடு நின்றுவிடும். கிரையம் பெற்றவர்களின் பெயரில்லாமல் அநேக வருஷங்களுக்கு முன் கிரையம் செய்தவர்களின் பேரிலுள்ள ஓட்டுக்கள் கிரையம் செய்தவருக்கே உரிமையாகிவிடும் ஆனதால் இனிமேலாவது இப்பொழுது யார் அநுபவத்தில் இருக்கிறதோ அவர்களுடையபேரில் சொத்துக்களை உடனே தாக்கல் செய்வதற்கு ஆன முயற்சியைச் செய்யுங்கள்.

இன்னும் சிலஇடங்களில் ஒரு குடும்பத்திலிருக்கும் சொத்துக்களெல்லாம் பெரியவர் ஒருவர் பேரிலேயே தாக்கலாகிவருவது வழக்கம். அந்தக்குடும்பத்தில் முப்பதுபேர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் மேற்படி சொத்துக்களை பாகாசாரம் தனித்தனியாக அநுபவித்து கிஸ்தியும் செலுத்திவருவார்கள். ஒவ்வொருவரும் பத்து ரூபாய்க்குமேல் கிஸ்திசெலுத்தும் ஓட்டுரிமை யுள்ளவர்களாகவுமிருப்பார்கள். இவர்களுடைய சொத்துக்களெல்லாம் மொத்தமாய் ஒருவர்பேரில் தாக்கலாகி வருகிறபடியால் இவ்வளவிற்கும் எந்தநபர்போரால் மேற்படி சொத்துக்கள் இருந்துவருகிறதோ அவர் ஒருவருக்குத் தான் ஓட்டுக் கொடுக்கும் பாத்தியதை உண்டு. அதுவும் ஒரே ஒரு ஓட்டுத்தான். மற்ற இருபத்தொன்பது ஓட்டுக்களும் விழலுக்கிறைத்த நீரை யொப்ப வியர்த்தமாய்ப் போய்விடுகிறது.

(இன்னும் வரும்)

குமாரசாமி.

---

### மித்திரன் அபிமானிகட்கோர் விண்ணப்பம்.

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு"

என்னும் திருவாக்கின்படி இவ்வுலகின்கண் ஏற்பட்டுள்ள மானிடஜென்மத்திலுதித்தவர்கள் யாவரும் தம்ஜீவியகாலத்தில் தம்தேசத்தவர்கள் பற்பல அறிவிலும் சன்மார்க்க நெறியிலும் தேர்ச்சியடையும்பொருட்டு தம்மால் செய்யக்கூடியகருமங்களையனுசரித்து வருவது அதுதேசத்தின் வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

தன்னினம், தன்மனவி, தன்பிள்ளை என்ற சிந்தனையை மேற்கொண்டு சுயநயத்தால் கூருந்தி சுயவாழ்க்கைக் கென்றே இராப்பகலாய் உழைக்கும் அநேகர் நம்நாட்டில் இருப்பது சகஜமானாலும் மேற்கூறிய நாகரீகம் பெற்று அத்தகைய கல்வி கற்றனர்கள் சிலர் தேசாபிமானங் கொண்டு "பேதமைபகற்று" என்னும் முதுமொழியை ஆதரித்து நம் நாட்டவரின் இருள்போன்ற அறிவின்மையை நீக்கும் பொருட்டு தங்களால் இயன்ற மட்டும் முயற்சித்து வருவதையும் பார்த்து வருகிறோம்.

நாட்டிற்கு நாம் செய்யக்கூடும் நற்கருமங்கள், பற்பலவுள. பாடசாலை ஏற்படுத்துவதும் பற்பல உபந்நியாசங்கள் செய்தலும் தாழ்ந்தோர் வறியோரின் பிள்ளைகளை மிக்கப்பணச் செலவின்றி படிப்பிப்பதும், கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தலும் இத்தகைய கருமங்களேயாம்.

மிக்க நாகரீகத்தால் பிரக்யாதிபெற்ற நாடுகளில் எழுத வாசிக்கத் தெரியாத் ஆண் பெண் உண்டென்று சொல்வது சாத்தியம். அவர்களுக்கு படிப்பின்மேலிருக்கும் வாஞ்சை அற்பசொற்பமல்ல. அதற்கனுசாரியாயும், அவர்கள் அறிவை விருத்தி செய்யும்படியாயும் தினசரி அல்லது வாரா்ந்திர மாதாந்திர வர்த்தமானப்பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு, நாடெங்கும்உலாவிவருவதையறிவோம். சிறிது வருடங்களுக்குள் திடீரென அதிசயிக்கத்தக்கவிதமாய் மிக்கநாகரீகத்திற்குள்ளான ஜப்பான் தேசமே முக்கிய அத்தாக்ஷி. சொற்பவரும்படியுள்ளவரும் பத்திரிகை வாங்கிவாசிக்கிறார்களென்றால் அந்நாட்டின் பெருமையை என்னவென்று சொல்லுவது!

நமது தேசத்திலோ அவ்வித ஆவல் இன்னும் உண்டாக வில்லையென்றே சொல்லலாம். எழுதவாசிக்கத் தெரிந்த புருடர்கள் மிகவும் சொற்பம். பெண்களோ அதினினும் சொற்பம். மேலும் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்த பி. ஏ. பி. எல். எம். ஏ, பட்டதாரிகள் தமிழ் பாஷையை அலச்சியம் செய்து அதன் இலக்கண இலக்கியங்களை வாசிக்கவெறுப்புற்றவர்களா யிருந்து கொண்டு வருகிறார்கள். தேசமுன்னேற்றத்திற்கு தாய்பாஷையின் அபிவிருத்தி முக்கிய மென்பதை ஒவ்வொரு தமிழரும் மறந்துவிடக்கூடாது. எம தாய்பாஷையாகிய அமிர்தம் போன்ற தமிழை விருத்தி செய்வது நமக்கேற்பட்ட கடமையென்றுணர்ந்தும் நமது குலமக்கள் எத்தகைய கல்விகேள்விகளிலும் மிக்கோராய் விளங்கவேண்டுமென்றும் நீர ஆராய்ந்து அறிந்து. குலமுன்னேற்ற இயக்கத்தில் அவாமேலீட்டினால் நாடார்குல மித்திரனென்னும் பத்திரிகையை தூண்டுகோலாக வைத்து ஜாதிய இயக்கத்தை நடத்திவருகிற நமது பத்திராதிபர் ஸ்ரீமான் சு. அ. முத்துநாடார் அவர்களுக்கு கைகொடுத்துதவுவது மேலான சிலாக்கிய மென்றுகருதல் வேண்டும்.

நம் நாடாகிய தென்னாட்டவரின் ஜீவியமுழுவதும்; தமிழ் பாஷையோடே இசைந்திருப்பது மன்றியும், ஐரோப்பியபண்டிதர்களால் நம்பாஷையின் மேன்மை சிறப்புவிக்கப்படுவதாலும், அப்பாஷையையே நமதகத்தால் வழங்கிவருவதாலும், நாம் அதைப் போற்றிப் பிரஸ்தாபிக்கமுயலாதிருப்ப தெப்படி? எளிய நடையில் சொற்சுவை பொருள் சுவையுடன் அமையப் பெற்ற நமது மித்திரனென்னும் இப்பத்திரிகையின்பலஅரிய விஷயங்களை நாம் கண்ணுற்று வருகிறோம். புத்தியை விருத்தி செய்யும் விஷயங்களோடு சந்தோஷத்தை யுண்டாக்கி மனதைக்கவரத்தக்க விஷயங்களும் கலந்திருக்கின்றன, எளிய நடையில் விஷயங்கள் யாவுமெழுதப்பட்டுள்ளன.

---

### மகாஜன சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டி.

நாடார் மகாஜன சங்கம் உத்தரவுப்படி S. M. புதூர், சமாதானக் குறைவைத் தீர்ப்பதற்காக விருதுபட்டி நாட்டாண்மை ஸ்ரீமான் கருப்பையாநாடாரவர்கள் குமாரர் கிருஷ்ணநாடாரவர்கள் 1, டிஷ் டூர், ஹைஸ்கூல் மானேஜரும், முனிசிபல் வைஸ்சேர்மனும் டிஸ்டிரிக்ட் எஜிகேஷனல் கௌன்சிலருமாகிய ஸ்ரீமான் S. P. P. சண்முகசுந்தர நாடாரவர்கள் 2, ஸ்ரீமான் ரே. தே. பெரியண நாடாரவர்கள் 3, டிஷ்யூர் முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான் பே. சி. சிதம்பர நாடாரவர்கள் 4, அருப்புக்கோட்டை, சைவபாது க்ஷத்திரிய வித்தியாசாலை ஹைஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடாரவர்கள் 5, இவர்கள் ஐந்துபேர்களும் 6-3-23 மாலை 3½-மணிக்கு இவண் விஜயஞ் செய்து மாலை 7-மணிக்கு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் திருக்கோவிலில் ஊர்பொது மீட்டிங்கு கூட்டி வைத்து இவ்வூரிலுள்ள நாடார்கள் கக்ஷி பிரதிகக்ஷிகளை விசாரணை செய்து சில விபகாரங்களை பைசல் செய்து இரவு2-மணிக்கு கூட்டங்கலைந்தது.

மறுநாள்(7-3-23) காலை 8-மணிக்கு திரும்பவும் ஊர்பொதுக் கூட்டங்கூடி, மற்றும் விபகாரங்களை விசாரித்து எவ்வித முரண்பாடின்றி விபகாரங்களை தீர்த்து டிஷ சீமான்கள் முன்னிலையில் சகலரும் ராஜியாகி மனச் சந்தோஷத்துடன் விபூதி சந்தணம் தாம்பூலம் வழங்கி அன்று பகல் 2-மணிக்கு கூட்டம் கலைந்தது.

அன்று பகல் 3-மணிக்கு இவ்வூர் க்ஷத்திரிய வித்தியாசாலை ஸ்கூலை பார்வையிட்டார்கள் ஸ்ரீமான் S. P. P. சண்முகசுந்தரநாடாரவர்கள் கல்வியைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்து இந்த ஸ்கூல் இன்னும் உன்னத ஸ்திதிக்கு வரும்படி கடவுளை பிரார்த்திப்பதாகவும் உபந்நியாசம் செய்தார்கள். ஸ்கூல்மாணவர்களால் வந்தன வாழ்த்துப்பாடி ராஜவாழ்த்துடன் முடிந்தது. மாலை 4-மணிக்கு வெம்பூர் மார்க்கமாய் ஸ்பெஷல் மோட்டாரில் பிரயாணமானார்கள் என்று ஸ்ரீமான் பலவேச நாடார் எழுதுகிறார்.

---

இப்புவியில் காணப்படும் எந்த அநுஷ்டானத்தையும் பூரணம் கரையற்றது என்று சொல்வதில் பொருளில்லை. ஆதலின் இப்பத்திரிகையையும் வழுவற்றதெனசொல்லோம், என்றாலும் "நன்மைகடைப்பிடி" "செய்வனத் திருந்தச் செய்" என்னும் ஆத்திசூடியின் சத்தியங்களை பால்யமுதல் நன்குணர்ந்த நம் நண்பர் சுனம்முத்துநாடாரவர்கள் மனோபலம் தேகபலம் உடையவரென்றும், தமிழில் ஒப்பற்றபயிர்ச்சியுடையவரென்றும் தெரிகிறது. இப்பத்திரிகையும்அவர் ஆளுகைக்குள்ளிருப்பதால் வளர்ந்தோங்கிமாசற்றவிதமாய் பிரகாசிக்கு மென்பதற்கு ஐயமில்லை.

நம் தேயத்தில் முற்காலத்தில் நம் நாடார்குல சமுதாயத்திற்கு வர்த்தமானப்பத்திரிகைகள் கிடையாவெனப்பகர்ந்ததினால் நவீனகாரியங்களின் மேல் நமது நாட்டார்க்கு நாட்டமில்லை யென்று சொல்ல இடமில்லை.

கனவான்களே !! தென் திருவிதாங்கூர் வாசிகளாகிய செல்வச் சீமான்களே !! நாடார்குல நவமணிகளே !!! சமுதாய ஒற்றுமையைக் கருதி நம் நாடார்குலமித்திரனுக்கு சந்தாவாகச் சேர்ந்து கொண்டு தங்களால் வேண்டிய சந்தாவைர்சேர்த்துக் கொடுத்து உதவுமா[illegible] [illegible]ங்களை வேண்டிக்கொள்கிறேன்.

L. S. லெட்சுமணபிள்ளை,

நாகர்கோவில்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## எமது வந்தனம்.

நாம் சென்ற மூன்று மாதங்களாக நாடார்குல மித்திரன் அபிவிருத்தியைக் குறித்துச் சென்ற பிரயாணத்தை முடித்துக் கொண்டு 6-3-23 யில்மாலை 7½-மணிக்குஎமது வாசஸ்தலமாகிய அருப்புக்கோட்டையில், எமது அன்பார்ந்த நண்பர்களாலும், பந்து வர்க்க சகோதரர்களாலும் அன்போடு வரவேற்கப்பெற்று சுகமாக வந்து சேர்ந்துளோம்.

ஸிலோனிலும், பர்மாதேசத்திலும். நமது மித்திரன் அபிவிருத்திக்கு மிக ஊக்கத்துடன் ஒத்தாசை செய்த குலாபிமான உத்தம பிரபுக்களுக்கும் அன்புள்ள பால்ய நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

நாடார்குல மித்திரன் அபிவிருத்தியில் இன்னும் வேண்டிய ஒத்தாசைகள் வேண்டும்; பாதேசலாம் செய்து தரமுன்வரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

நமது நண்பர் T. கருட்கபயாபிளை அவர்கள் 7-3-23 ல் மாலை 4-மணிக்கு தமது சொந்தவாசஸ்தலமாகிய போடம்பட்டிக்கு சேன்றிருக்கிறார்களென்பதை நேயர்களறிவார்களாக.

பத்திராதிபர்,

## நாடார்குலமித்திரன்

துந்துபி௵ பங்குனி௴ 8உ.

## முன்மாதிரி.

நமது இந்திய சமஸ்தானங்களிலொன்றாகிய போபால் சமஸ்தானத்தில் அச்சமஸ்தான பீகம் அவர்கள் தமது சமஸ்தானத்திற்குள் இனிமேல் மதுபானம் கூடாதென்றுகண்டிப்பாக உத்தரவு செய்து விட்டாரென்பதாகத் தெரியவருகிறது. அந்தச் சமஸ்தானத்துக்கு இந்தவகையில் வருடந்தோறும் 4, 5, லச்சம் ரூபாய் வருமானங்கிடைத்து வந்தபோதிலும், அதை யொரு பொருட்படுத்தாமல் மதுபானஞ் செய்யும் வழக்கமொழிந்தால், ஜனங்கள் தேகாரோக்கியமும் தொழிலில் ஊக்கமுடையவர்களாவதுடன் பொருளாதார நிலைமை விருத்தியடையு மென்றும் மதுபானத்தில் கிடைத்த வருமானம் 5-லச்ச ரூபாயும்வேறினங்கள்மூலமாய்பெற்றுக்கொள்ளலாமென்பதுவே அவருடைய அபிப்பிராயம் போலும்.மதுபானத்தில்வருந்தீமையை அறிந்து அதனால் தமக்குக் கிடைக்கும் வருமானத்தையு மிழந்து அவ்வழக்கந் தொலைந்தாலேபோது மென்று மனமிசைந்து அச்சட்டஞ்செய்ய முன்வந்த போபால்பீகம் அவர்களை நமது மனமார வாழ்த்துகின்றோம்.

இவ்வழக்கத்தை முன்மாதிரியாகக்கொண்டு மற்றச் சமஸ்தானங்களும்,தங்கள் தங்கள் சமஸ்தானங்களில் மதுவிலக்குச் சட்டங்கள் செய்தால் நலமன்றோ! சிறிய சமஸ்தானங்களுங்கூட தங்களுடையலாபத்தைக் கருதாமல் சமூக முன்னேற்றத்தையும் சன்மார்க்க வழியையுங் கண்டு மதுவிலக்கைக் கண்டிப்பாய் க்கையாளமுன்வந்தும், நமது கவர்ன்மேண்டார் இது விஷயத்தில் என் காலதாமதங் காட்ட வேண்டும்? மதுபானத்தினால் மனிதருக்குள்ள இயற்கை அறிவு குன்றி மந்தமதி வலுவுற்று,தேகபலங்குன்றி திராதரோகத்துக்காளாகி அதனால் பல தீமைகளைச் செய்து சதா துன்பமுடையவர்களாயிருப்பதா்லும் ஏழைகளாயிருப்ப தோடு,சந்ததி விருத்தியுங்கூட வல்லவோ குறைந்துபோவதாக பலமேதாவிகள் கூறியிருக்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பாவிலுள்ள டாக்டர்களும் தத்துவ சாஸ்திரிகளும் மதுபானத்தினால், 100-க்கு 9.1-பேர்களுக்கு மூளைகலங்கிப் போகிற தென்றும், ஜனங்களுடைய வறுமைக்கும் சிறுமைக்கும் குடியே காரணமென்றும், பொய் களவு சொல்ல முதலிய பொல்லாங்குகள் செய்வதற்குங் குடியேகாரணமென்றுங் குடியென்ற கொடிய வழக்க மொழிந்தால்,ஸிவகாரக்கோர்ட்டுகளே வேண்டியதில்லை யென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். இவ்வளவு கெடுதலான காரியத்தை ஒழித்து நல்லகாரியத்தைச் செய்ய நமது கவர்ன்மெண்டார் தீவிரமாய் ஏன் முன்வரக் கூடாது?

முற்கால இந்திய மேதாவிகளும் மதுபானம் பஞ்சமா பாதகங்களில் ஒன்றென்றும்டகர்ந்திருக்கிறார்கள். தற்கால இந்திய மேதாவிகளும், மதுபானம் தகாதென்றே சாற்றுகின்றார்கள். மதுபான விலக்குச் செய்ய சர்வ அதிகாரமும் சாவஜன ஆதரவும் பெற்றுள்ள நமது கவர்ன்மெண்டார் இச்சட்டத்தைச் செய்யத் தயங்கவேண்டிய தென்னவோ. மதுபானத்தை ஒழித்துவிட்டால் வருமானம் போய்விடுமே யென்று கவர்ன்மெண்டார் கவலைப்படத்தேவையில்லை. ஐரோப்பாயுத்தத்தையாவது, அதனால் வருங் கஷ்ட நஷ்டங்களையாவது, இந்தியா எதிர்பார்த்திருந்ததா? அப்படியிருந்தும் யுத்தம் என்ற சத்தங்கேட்டவுடன் தனது படைகளை ரத்தஞ்சிந்த அனுப்பி வைத்து அதனால்நேர்ந்தகஷ்ட நஷ்டங்களுக்கும் உள்ளாகயிருந்தது. பொருளாதார நிலைமை குன்றி நிர்வாகத்துக்குப் பணமில்லாத போதும் ஒவ்வொரு வரியினங்களையும் உயர்த்துவதற்கு ஒத்திருந்தது. இவ்வகைக்கெல்லாம இணக்கமாயிருக்கும் இந்தியா மதுபான விலக்கால் வரும், வருமானக்குறைக்கு மற்றொரு வகையில் ஈடுபண்ணிக் கொள்ள சம்மதிக்காமலாவது சாத்தியமில்லாமலாவது போகு மென்று நினைக்க ஹேதுவில்லை. இந்தியாவில் குடிவழக்க மொழிந்து விட்டால் ஐரோப்பிய மதுவியாபாரிகள் நஷ்டப்படுவார்களென்றுவது; பயப்படவேண்டியதுமில்லை. ஆகையால், புதிய அரசியல் சீர்திருத்தத்தில் ஏற்பட்ட நன்மையாக விளங்கும்படியேனும் மது பானத்தை யொழிக்க வழிபார்க்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

உலகத்திலுள்ள சகல பொருட்களும் சர்வஜீவத்யாபரனுகிய ஆண்டவனால் சர்வஜீவ தமாக்களும் ஜீவித்திருப்பதற்கேற்ப சிருஷ்டிக்கப் பெற்றிருக்கிறது. ஈஸ்வரனால்இயற்கையாக சிருஷ்டிக்கப்பெற்ற பொருட்களை அப்படி யப்படியே சகல ஜீவராசிகளும் உட்கொண்டு ஒரு காலம் உஜ்ஜீவித்திருந்து வந்திருக்கின்றது. நாளடைவில் நவீன நாகரீகங்கள் தோன்றி இயற்கைப் பொருட்களோடு செயற்கைப் பொருட்களையுங் கலந்து பாகுபாடு செய்து உட்கொள்ளும் வழக்கங்கள் வழக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றன. காய்கனி கிழங்குகளைச் சாப்பிடும் மிருகங்களேனும் மச்சம் மாமிசங்களைத் தின்னும் மிருகங்களேனும் பழங்களையும் புல்லுருவிகளையும் சாப்பிடும் பட்சிகளேனும், எதையாவது சமைத்தேனும் செயற்கை செய்தேனும் சாப்பிடுவதில்லை. அப்படிச் சாப்பிடுகிற 'ஜீவசந்துக்'களும் உயிரோடு ஜீவிக்கத்தான் செய்கின்றன. முற்காலத்து முனிபுங்கவர்களும் பட்சிகளும் மிருகங்களும் புசிக்கின்ற இயற்கைப் பொருட்களாகிய காய் கனி கிழங்கு கோழை தழை முதலிய கந்தமூலப்பதார்த்தங்களையே உண்டு பல்லாயிரவருஷங்கள் வரையும் ஜீவித்திருந்து வந்திருக்கிறார்கள். தற்போதும் அம்முறையை யக் கொண்டிருக்கும் மகான்களுமிருக்கின்றார்கள்.

ஆகவே அந்தந்த தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக் கேற்றவாறு இயற்கைப் பொருட்களை சமைத்து உள்ள விஷத்தைக் குறைத்தும் சில பொருட்களில் செயற்கையால் விஷத்தைக் கூட்டியும் உபயோகப் படுத்திக் கொள்ளும் வழக்கமே பிரதானமாய் விட்டது. நாவுக்குருசிகரமாக இயற்கைப் பானங்களை மாற்றி செயற்கையாக பலபொருட்களைச் சேர்த்து அதிகமாக உண்டு கொழுப்பதிகரித்து ஸ்தூலம் பெருத்து சொற்பாயுளோடு மரித்துப் போகிறவர்களை அதிகம் போன்றிருக்கப் பொருட்களை அப்படியே உண்டு அதிககாலம் ஜீவித்திருப்பவர்களோ மகாற்பமாகவேனு மிருப்பது அரிதாகத்தானிருக்கிறது. இப்படி இயற்கையாக மனிதருக்கு கடவுளால் அருளப்பெற்றிருக்கும் உணர்ச்சியுடன் அதிகஉணர்ச்சி வேண்டு மென்றுவெறி கொள்ளும் செய்கை வஸ்துக்களை உண்டு கொஞ்சம் வெறித்து விட்டு இயற்கையாயிருந்தவெறியுங்குன்றிப்போவதறியாமல் மனித ஜீவியங் குன்றி வருகின்றது. மனிதர் அறியாமல் அருந்தும் விஷபானங்களிலெல்லாம் மதுபானம் மகா விஷமுள்ளவையேயாம். அன்னிய நாட்டு மதுவினங்களும் நம் நாட்டுச் சாராயங்களும், செயற்கைப் பிரமாணத்தால் தான் வெறியுண்டாகக் கூடிய விஷம் ஏற்றப்படுகிறதென்று நாமறிந்திருக்கிறோமல்லவா, அதுபோல் பனை தென்னை ஈந்து முதலிய பல விருட்சங்களிலுள்ள ரசத்தை கொஞ்சம் புளிக்கவைத்து விஷமேற்றுவதாகவும் தெரிகிறது. மேலும் அவ்விருட்சங்களின் பதனீர்களைக் குடங்களில் அடைத்து சூரியஉஷ்ணம் படக்கூடிய விடங்களில் பூமிக்குள் வைத்து புளிப்பேற்றி வெறிக்கச்கூடிய கொம்மட்டிவிதை,கஞ்சா இலை முதலிய செயற்கைப் பொடிகளைத் தூவி விஷமேற்றப்படுவதாகவுஞ் சொல்லப்படுகிறது. இரங்கூனில் கவுணியரிசி யென்னும் ஓர் வகை நெல்லரிசியை ஊரவைத்து நாற்றமெடுக்கும்படி செய்து அதில் புளிப்பேற்றி விஷமுள்ளபானமாயுபயோகப் படுத்துகிறார்கள் என்றுந் தெரிகிறது. தவிர காப்பி, தேயிலை, கோக்கோ முதலிய வஸ்துக்களிலும் விஷமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்விஷ வஸ்துக்களையே சகல ஜாதியார்களும் தங்கள் தங்கள் பிழைப்புக்கு வியாபாரத் தொழிலாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷமுள்ள பானங்களில் காபி, தேயிலை, கோக்கோ முதலிய விஷ வியாபாரம்தற்கால நாகரீகத்தையொத்ததே என்னலாம். இவ் விஷபானங்களைச் செய்வதும், விற்பதும், அருந்துவதும் மகாபாவமென்றுந் தெரிகிறதன்றோ! இவர்களெல்லாம் கடவுளுடைய சன்னிதானத்தில் நியாயத்தீர்ப்புக்கு வரும்போது கொடிய நரக வேதனைக்குள்ளாக்கப்படுவார்களென்று சாஸ்திரங் கூறுகின்றதன்றோ. ஆகையால் இது விஷயத்திற்காகக் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் சிருஷ்டிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்வதுடன் இவ் விஷபானங்களை உற்பத்திசெய்யும் சகல ஜாதியார்களும் விற்பனை செய்யும்

## குறிப்புகள்.

### ஸ்ரீமான் ஊ. பு. அ சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் M. L. C.

சென்னை மாகாணசட்டசபையில் நமது குலப் பிரதிநிதியாக அமர்ந்திருக்கும் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களின் வீரிய குலாபிமானத்தின் மேன்மையைப் பற்றியும், அவருடைய நற்குணநற்செய்கைகளின்பிரஸ்தாபத்தைப்பற்றியும் நம்மவர்களில்அறியாதாரிருக்கமாட்டார்களென்றே நினைக்கிறோம். அவர் நம்குலப் பிரதிநிதியாக சட்டசபை அங்கத்தினர் பதவி ஏற்றுக்கொண்ட நான் முதல், பொதுஜனோபகாரியாய் நமது குலசேவையில் வெகுவாய் ஈடுபட்டு, ஆங்காங்குநடைபெற்றமகாநாடுகளுக்குத் தலைமை வகித்து, தனது பிரசங்க வல்லமையினால் நம்மஜனங்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டி, நமது இயக்கத்திற்கு, வளர்ச்சியும் கிளர்ச்சியும் செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதே. அவர் கடந்த இரண்டரை வருடங்களாக பலவழிகளிலும் செய்திருக்கும் தியாகம் போற்றத்தகுந்த வைகளே. ஆகையால் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களை மீண்டும் அடுத்த தேறுதலுக்கும் அபேக்ஷகராய் நிற்கும்படி மகாஜனசங்கத்தார் கேட்டுக் கொள்ள வேண்டும். மேலும் நம்குல வாக்காளர்கள் (ஓட்டர்கள்) விசேஷமாயிருக்கக்கூடிய பிரதேசத்தில் கனம் சௌந்தரபாண்டிய நாடாரைஅபேக்ஷகராய் நிற்கும்படி செய்து, யாதொரு பிரயாசையுமின்றி, ஜெயசீலராய் விளங்கும்படி செய்யவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில்,தான் நமதுகுல வாக்காளர்கள் அதிகம். ஆகையால் திருநெல்வேலி ஜில்லா வாசிகளாகியநாடார்குலநன்மக்கள் நமது மகாஜன சங்கத்தார் உத்திரவின் பேரில், தங்கள் ஜில்லாவிற்கு கனம் சௌந்தரபாண்டிய நாடாரை அழைத்து சுற்றுப்பிரயாணம் செய்து, நம்குல வாக்காளர்களுக்கு ஊக்கமும்,உற்சாகமுமுண்டாக்குவார்கள் என்று நம்புகிறோம்.

சட்டசபையில் மூன்று வருடம் அங்கத்தினராயிருந்து உலுடோக மிருப்பதினாலேயும். குலாபிமானக்குண சிலராயிருப்பதினாலேயும், இடைவிடாது நம்மவர்களின் முன்னேற்றத்திற்கென்னும் கருத்துமாய்உழைத்தவராயும் இன்னும் பொதுஜன சேவையில் வெகுவாய் ஈடுபட்டுழைக்கப் போவதாய் கொண்டிருப்பதினாலேயும் மீண்டும் கனம் சௌந்தரபாண்டிய நாடாரவர்களையே அடுத்த தேறுதலுக்கு எப்படியும் நாம் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டு மென்பதே நமது விருப்பமும் கோரிக்கையும் பிரயத்தனமுமாகும்.

### சீர்திருத்தக் கமிட்டி.

நாடார் மகாஜன சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளில் ஒன்றாகிய, 'புதுர் நாடார்களுக்கு ஏற்பட்ட ஒற்றுமை குறைவை நிவர்த்திக்க ஏற்பட்ட கமிட்டி, 6-3-23 யில் டை யூருக்குச் சென்று செய்த வேலையின் சுருக்கத்தை மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். இக்கமிட்டி தனக்கு ஏற்பட்ட பொருப்பை உணர்ந்து மிகவும் திருப்திகரமாயும் திறமையுடனும் வேலை செய்திருப்பது, குறிப்பிடத்தக்கது. கமிட்டிகளை பெயருக்காகத்தான் எற்படுத்தப்பட்டதோ வென்று நம்மகாஜனங்கள் நினைக்க இடங் கொடுத்து விடாமலும், காலாகாலத்தில் செய்யவேண்டியகாரியங்களைக்கவனிக்காவிட்டால் காரியக்கெடுதியாகு மென்பதை உணர்ந்தும் இப்படிப்பட்ட விஷயங்களில் ஈடுபட்டு உழைக்கவேண்டியது தனது கடமைஎன்பதை எண்ணியும்ஒவ்வொருகமிட்டியும் தனதுவேலையைச்செய்யக்கடமைப்பட்டிருக்கின்றதென்பதை வற்புறுத்துகிறோம். மேல்கண்ட கமிட்டிதனது வேலையைமுடித்துமுன்மாதிரியாக நடந்து கொண்டது போல் மற்றக் கமிட்டிகளும்தனதுவேலையைதொடங்கியும் தொடங்கியதை சரிவரமுடித்துவைக்க எல்லாம் வல்ல ஈசன் நல்ல சந்தற்பத்தை அளிப்பாராக!

---

எல்லா வகுப்பினர்களும் பானம் பண்ணுகின்ற பலஜாதிக்காரர்களும் தன்னையுங் கெடுத்துப்பிறரையுங் கெடுத்து வீழத்தக்கூடிய ஒரு கொடிய முறையைக் கையாளவா, காதென்று தாங்கள் தாங்களே உணர்ந்து கொண்டால் மிகவுஞ்சிலாக்யமாகு மென்பதை நாம் அதிகமாயெழுத வேண்டியதில்லை யென்று இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## தீண்டாமைக்குத் தீர்மானமா?

நாளது வருஷம் 19-2-23 யில்யோ திமால் மஹாராஷ்டிர ஒதிர்துதர்மபரிஷத், ஸ்ரீசங்கராச்சாரியார் தலைமையில் கூடிசில தீர்மானங்களை நிறைவேற்றியது. அவைகளில் பின்வரும் தீர்மானமுமொன்றாகும் அதாவது:-"கோவில்கள் பரிசுத்தஸ்தலங்கள் கிணறுகள் ஆகியவைநீங்கலாக மற்றப்படியுள்ள பொது ஸ்தலங்களில் தீண்டாமை கூடாதென்றும் சிபார்சு செய்கிறது. அவ்வமயம் ஸ்ரீசங்கராச்சாரியார் தமது முடிவுரையில் தீண்டாமையை வற்புறுத்திப் பேசும்போது தீண்டாதவர்களின் நிலைமை உயர்த்தக்கூடுமானதை எல்லாம் செய்வதாக அவர் கூறினராம். இதைக்கேட்டுக்கொண்டிருந்த தீண்டாதவர்கள் குதூகலமடைந்துவிட்டார்களாம். இப்படிப்பட்ட தியாகத்தின் பெருமையை என்னவென்று சொல்லுவது? தீர்மானத்தின்போக்கை கவனித்தால் நகைப்பு ஒரு பக்கமும் வெறுப்பு ஒருபக்கமு முண்டாகிறது இந்நிலைமையில் தீண்டாதவர்கள் கூடாசந்தோஷித்துவிட்டார்களாம். இப்படிப்பட்ட பெருங்காரியத்தை சாதித்துவிட்டதற்கு அவர்கள்தான் எப்படி சந்தோஷிக்காமலிருப்பார்கள்?

இப்படி அசட்டுத்தனமாய் தீண்டாமையே என்னவென்று அறியாமல் தீர்மானம் செய்ய முன்வந்துவிட்டார்களே என்று அவர்கள் பால்பரிந்து வருத்தப்படவிட்டவர்களாய் சிரித்திருக்கலாம். அதைப்பார்த்தவுடனே இத்தப்படித்தமேதாவிகள் தம்முடைய செய்கைக்கும் தீர்மானத்தையும் பார்த்து சந்தோஷிக்கின்றார்கள் என்று வைத்துக்கொண்டார்கள் போலும். இப்படி அரைகுறையாக அபிமானத்தைக் காட்டிக்கொண்டு பொதுஜனப்பிரியர்கள் போல் பாவனை செய்து, மனதிலொன்றும் வாக்கிலொன்றுமாகவெழுதுவதும் பேசுவதுமாயிருந்தால், நமதுதேசம் எவ்வித முற்போக்குக்கும் அருகதையில்லாமல் போகுமென்று வருந்தவேண்டியதிருக்கிறது. மேலும் "மனிதவர்க்கத்தில் தீண்டப்படாதவர்கள் தீண்டக்கூடியவர்கள் என்றுஉண்டா? எல்லோரும் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் தானே; அப்படியிருக்க தீண்டப்படாதவர்கள் என்று ஏற்படுவதற்கு காரணம் என்ன? எல்லாம் நமக்குள்ளே தானே ஏற்படுத்தப்பட்ட பழக்கவழக்கமாயிருக்கிறது. ஒரு காலத்தில் தொழிலைப்பற்றியும், விசேஷ அறிவையடையப் பெருத காரணத்தையுங் கொண்டு, ஏற்பட்ட பழக்கவழக்கத்தை மாற்றிவிடக் கூடாதா? எல்லாம் நம்மால்தான் ஏற்பட்டது அது நம்மால்த்தான் போகவேண்டும். ஆதியில் ஏற்படுத்தப்பட்ட சன்மார்க்க சட்டதிட்டங்களுக்கும் இப்பொழுது நடந்துகொண்டு வருவதற்கும் எவ்வளவோ வித்தியாசப்பட்டுவிட்டது. தொழில் பொருட்டு ஏற்பட்டுவிட்ட தென்றாலும், பிராமணர்கள்தங்கள் ஜாதித்தறியதொழில் ஒன்றையேனும் செய்கிறார்களா? தற்சமயம் அவர்கள் செய்யாத எந்தத்தொழில்தான் பாக்கியிருக்கிறது? இழிதொழில் என்று அவர்களே வரையறுத்துச்சொன்னதொழில்களை எல்லாம் கைபாடிவருகிறார்கள். இதுபோலதான் மற்ற ஒவ்வொரு ஜாதியாரும்சகல தொழில்களையும்பார்த்து வருகிறார்கள். அதுபோலதான் தீண்டப்படாதவர்கள் என்று நினைக்கப் படுவோர்களும்கூட, சகல தொழில்களிலும் உத்தியோகங்களிலும் இருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது இவர்கள் என்னமேல்? அவர்கள்என்னகீழ்? ஒரு பஞ்சமன் செய்யக்கூடிய தொழிலைஒருபார்ப்பான்செய்தாலும்அவன்பார்ப்பான்மகன்பார்ப்பானும்! ஒருபார்ப்பான்செய்யவேண்டியநித்தியகாலைக்கடன்களை முடித்துக்கொண்டு, ஆசார அனுஷ்டானமாய் பக்திமேலீட்டால்பரமன் அடி தொழுதுகொண்டு, ஒரு பஞ்சமன் பரிசுத்தவானாயிருந்தாலும், அவன் பஞ்சமன்தான் அவனைத்தீண்டக்கூடாது. ஆனால்ஒருபார்ப்பான் பஞ்சமன்செய்யாதனமெல்லாம் செய்துவிட்டுதொழில் இல்லாமல்,மகாகேவலமாய்அலைந்து திரிந்தாலும் உடையுடுத்திருந்தாலும், சாமி! சாமி!! என்பதற்குகுறையில்லை. அப்படியானால், குலம் என்பதுதான் பெரிதா? அல்லது ஆசார அனுஷ்டானம் பெரிதா? ஆசாரத்திற்குதகுந்தபடியாய் குலம் குறிப்பிடப்பட்டதேயொழிய, ஒரு குலத்தில் பிறந்துவிட்டதற்காக உயர்ந்தவன் என்னுவபடி வைத்துக்கொள்ளுவது? ஆகையால் தற்காலத்தில் ஜாதீய வாழ்முறைகளெல்லாம் தலைகீழாக மாறிவிட்டபோது. தீண்டாமையைமட்டும் அப்படியே எப்படிவைத்துக்கொள்ள சாத்தியப்படும். இதனால் நீசப்பிரியசாது,அவன் சின்னச்சாதிஎன்று வேற்றுமை பாராட்டலாமா? என்ன அநியாயமிது: எல்லோரும் உருவத்திலும் தோற்றத்திலும், உள்ளத்திலும் நடத்தையிலும், பணத்திலும், குணத்திலும் ஒன்றுபோல்தான இருக்கிறோம் அப்படி இருக்கும்போது, அவன் இங்கே இருக்கக்கூடாது. நாம் இங்கே இருக்கலாமென்று சொல்லிக்கொள்ளுவதற்கு என்னநியாயமிருக்கிறது? ஆகையால் எல்லோரும் இனிசமத்துவத்துடன் தானிருக்கவேண்டும்" என்று இப்படிவெகுஅலங்காரமாகவும்தெளிவாகவும்உதாரணங்களுடனும் உண்மைத் தன்மையோடுபோதவும்பேசும்பேச்சைப் பேச்சாகவைத்துவிட்டு; பிரசங்கத்தை பிரசங்கமாக யிருக்கவிட்டு; பிரசங்கமேடையை விட்டிறங்கியவுடனே பின்தங்கியபாது "கோவில்கள் பரிசுத்த ஸ்தலங்கள் கிணறுகள் ஆகியவைகள் நீங்கலாக தீண்டாமை கூடாதென்று சிபார்சு செய்கிறோமென்று தீர்மானிக்கிறார்களென்றால் அவர்களுடைய செய்கையையும் பிரசங்கத்தையும் எப்படி நம்புவது? இப்படி இவர்களை மகா அசட்டுத் தனத்திற்கு இடங்கொடுத்து கண்டவர்கள் நகைக்கும்படி கிணறுவரைக்கும் தீண்டாமையை ஒழிக்க சிபார்சு செய்கிறோம், கோவில் வரைக்கும் தீண்டாமை கூடாதென்று சிபார்சு செய்கிறோமென்று தீர்மானஞ் செய்யச்சொன்னதாரா? இத்தகையோர் தீண்டாமையைத் தீண்டாமையாகத்தான் வைத்திருக்கவேண்டுமென்று ஒன்றும் பேசாமல்ஒரே அடியாய் சும்மா இருந்திருக்கவேண்டும். ஆனால்,இவர்கள் ஆனைக்கிணறு தாண்டி பல்டியடித்து பல்லுடைத்துக்கொண்டது போல, தீண்டாமை இன்னதென்று அறியாமல் பேசுகிற வகையில் சிறிதும் பாக்கியில்லாமலும். பிரசங்கத்தில்மற்றவர்களுக்குவிட்டுப் போகாமலும் கண்ணியமுடனேபேசிவிட்டு,பின்இதுவரைக்கும் தீண்டாமையை வைத்துக்கொள்ளக்கூடாது; அதுவரைக்கும்வைத்துக்கொள்ளலாமென்றால் இதற்குஎன்ன செய்கிறது? இன்னும் நம் தேயம் முன்னேற்றமடையக்கூடியகாலம் கிட்டவில்லைபோலிருக்கிறது என்று எண்ணவேண்டியதுதான். ஆனால், இவர்கள் இங்கு இப்படி தீர்மானிக்கிறார்கள்; இந்திய சட்டசபையில் ஜாதி வித்தியாச மசோதா ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும்போது, (நீதிபரிபாலனத்தில்சாதி வித்தியாசம் கூடாதென்றும் வெள்ளையர்களென்றும் கருப்பர்களென்றும் இருக்கக்கூடாது. ஒரே குற்றத்திற்கு ஐரோப்பியர்க்குஒரு தண்டனை இந்தியர்க்கு ஒரு தண்டனையா? இதுஎல்லாம் அநீதியாகும் என்றும்) ஐரோப்பியர்களை வெள்ளைக்காரமுதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளுமேவிசாரிப்பதுபோல்மற்ற இரண்டாவது வகுப்பு மூன்றுவதுவகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாகிய இந்தியர்களும் விசாரணை செய்யத்தக்கவாறு சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டு மென்று ஒரு அங்கத்தினர் கேட்டதற்கு இந்தியசட்டசபை உள்நாட்டு மெம்பர் கனம் ஸர்மால்கம்ஹேலி என்ற ஆங்கிலேயர் பதில் சொல்லும்போது, ஐரோப்பியர்களுடைய தன்மைக்கும் நாகரீகத்திற்கும தகுந்தவாறு விசாரணைசெய்ய, இரண்டாவது மூன்றுவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாகிய இந்தியர்களுக்கு யோக்கியதையில்லையென்று குறிப்பிட்டுக் காட்டுகிறார். இதைக் கவனிக்கும்போது ஐரோப்பியர்கள்இந்தியர்களை தாழ்ந்தவர்கள சம அந்தஸ்துவகிக்க லாயக்கில்லாதவர்கள் என்று நினைத்து சாதிவித்தியாசமகாட்டுகிறார்களெனத்தெரிகிறது. இந்நிலைமையில் இந்தியர்களுக்குள் இவன் உயர்ந்தவன் அவன் தாழ்ந்தவன் என்றுஇல்லாவிட்டால் என்ன? நமக்குள்ளிருக்கும்குற்றத்தை நாம் நீக்கிக்கொள்ளாமல் அத்தகுற்றத்தை மற்றொருவன் செய்கிறானென்று பொறுமைப்படுவதில் என்னபயன்?

இதே விஷயத்தைப்பற்றி காங்கரஸ்வாதியும்பழுத்ததேசாபிமானியுமானஈரோடு ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் அருப்புக்கோட்டைக்குஇரண்டாவதுமையிலிலுள்ள பாலையம்பட்டியில் நடந்த அருப்புக்கோட்டைதாலுக்கா மகாநாட்டிக்கு தலைமை வகித்து முடிவுரையில் குறிப்பிட்டதை ஈண்டு எடுத்துக்காட்டுவதுசாலச்சிறந்ததாகும். அதாவது:-"இந்தியர்களாகிய நாம் நமக்குள் அவன்தீண்டப்படாதவன் தாழ்ந்தஜாதி என்று எண்ணிக்கொண்டு ஒன்றுக்கு ஒன்று ஒதுங்கிநிற்கிறோம். ஆனால், வெள்ளைக்காரர்கள் நம்மையெல்லாம்பொதுவாகதீண்டப்படாதவர்கள் என்று நினைத்து தங்களுக்குதனிவண்டிவேண்டும்இந்தியர்கள் தங்கள் பக்கத்தில் வாசஸ்தலம் அமைத்துக்கொள்ளக்கூடாது என்று எல்லோரையும் ஒரே மாதிரியாய் தாழ்ந்தவர்களாக்கிவிட்டார்கள். இதெற்கெல்லாம் காரணம் என்னவென்றால், நாம்தான் அவர்களை இப்படிச் செய்யப் பழக்கிவைத்து விட்டோம். நாம்ஒரு வெள்ளைக்காரனுடன் பழகி சிநேகம்பிடித்துவிட்டால் பெரிய தேவாதி தேவர்களுடன் சிநேகம்செய்து கொண்டமாதிரிநினைத்துக்கொண்டு, நம்மை நாமே காட்டிக்கொடுக்கிறோம். அதாவது:-இவன் தாழ்ந்தவன் இவனை இப்படித்தான் நடத்தவேண்டும். இவன் தீண்டாதவன்; இவனைத் தொடக்கூடாது என்று சொல்லுகிறது. அவர்கள் இதை படிப்படியாய் படித்துப் பழகிக்கொண்டு, எல்லோரையும்மொத்தமாகத் தாழ்ந்தவர்கள்என்று எண்ணிக்கொண்டு இழிவாக நடத்திவருவது போதாதா? இத்தியாதி காரண காரியங்களைக் கவனித்தாவது பேசுவதுஒன்றும் செய்வது ஒன்றுமாயிருக்காமல்தேசமுன்னேற்றத்தில் ஒரு தாய்பெற்ற பிள்ளைகள் போல் ஈடுபட்டு உழைக்க வேண்டுகிறோம்.

P. T. R. மேனிகாதன்.

## மித்திரன், பத்திராதிபர் வருகையும், வரவேற்பும்.

அருப்புக்கோட்டை மார்ச்சு 16. இந்நகர்வாசியும் பிரபலமரவியாபாரியும், நம்குலாபிமானியும் 'நாடார்குல மித்திரன்"பத்திராதிபருமான ஸ்ரீமான் சு. ஆ. முத்துநாடாரவர்களும் நாடார் மகாஜன சங்கக் கௌரவ பிரசாரகரும், மித்திரன் கௌரவ மானேஜருமான ஸ்ரீமான் T. கருப்பையா பிள்ளையவர்களும் சுமார் 5 மாதகாலமாக இலங்கை,பர்மாமுதலிய ஜலப்பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, 16-3-23 யில் மித்திரன் வாசஸ்தலமாகிய இந்நகருக்கு திரும்பிவரப்போகிறார்கள் என்ற நற்செய்தியை அறிந்து, நம்மவர்கள் அவர்களுடைய வரவைவெகுஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 15-3-16 யில் சென்னையைவிட்டு புறப்பட்டதாக தந்தி கிட்டிய உடனே மகா ஜனங்கள் ஒருவித ஊக்கமும் உற்சாகமுமுடையவர்களாய் அதிபர் வரவேண்டிய நேரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். 16-3-23 யில் இவ்வூரிலுள்ள முக்கியஸ்தர்களும், குலாபிமானிகளும், பாலியர்களும், மாணவர்களும் M. M. M. வாசகசாலை மெம்பர்களுமாக சுமார் 45 பேர்கள்வரை மூன்றுவது மைலில் வரையில் மூன்று மோட்டார்களுடன் எதிர்சென்று கண்டுகொள்ளுவதென்று ஏற்பாடு செய்திருந்ததற்கிணங்க, மாலை 5-மணிக்குச் சரியாய் புறப்பட்டுச்சென்றார்கள். குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சுமார் ஒரு மணி நேரம்வரை வெகுகுஷாலாய் சந்தோஷ ஆரவாரச் சம்பாஷணையுடன் ரோட்டுச் சாலைகளின் இரு புறங்களிலும் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டே, அதிபரவர்கள் ஏறிவரும்மோட்டார்காரை அதிக ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதிபரவர்களின் மேலுள்ள அபிமான மேலீட்டால் சில,குலாபிமான பாலியர்களும், மாணவர்களும் குறிப்பிட்ட இடத்திற்குமேல் ஒரு மைலில் அதிகதூரம்போய் முதலில் கண்டானந்திக்கவேண்டுமென்றுஎண்ணி,கால்நடையாய் நடந்துபோய் வந்தார்கள். அவர்கள் ஏறிவந்த மோட்டார் சரியாய் 6¾-மணிக்குள திரில்தென்பட்டவுடனே பெருத்த ஆரவாரத்துடன் கரகோஷஞ் செய்தார்கள். வண்டி மிகவும்சமீபத்தில் நெருங்கியஉடனே, "நாடார்குல மித்திரன் பத்திராதிபரவர்களுக்கு" "ஜேய்" "உங்கள் வரவு நல்வரவாகுக" என்றகுரலோசை திடீரென்று ஆகாயத்தில் உண்டான இடி முழக்கம்போல்உண்டானது. குறிப்பிட்ட இடத்தில் வண்டிவந்து நின்ற உடனே அதிபரவர்களும் கனம் பிள்ளையவர்களும் வண்டியை விட்டிறங்கினார்கள். பெரியோர்களும், முக்கியஸ்தர்களும் பாலியர்களும்தனித் தனியாகவும்மொத்தமாகவும் சேர்ந்தும்,இருவருக்கும்மாறிமாறிபுஷ்பமாலைகளை அணிந்தார்கள். அதே இடத்தில் சிறிதுநேரம் எல்லோரும் தாமதித்து சிற்றுண்டி அருந்தினார்கள். பிறகு எல்லோரும்தத்தம் மோட்டாரில் ஏறிக்கொள்ளவும், மோட்டார் வோட்டுபவர்களுக்குள் ஆனந்தப் போட்டி ஏற்பட, ஐந்து வண்டிகளும் வெகு அவசரமாக. ஒன்றை ஒன்று முந்துவதும் பிந்துவதுமாக ஓடிவந்தவேகத்தின் தன்மையை ஈண்டு எழுதுவதற் கிடமில்லாததற்று விடுத்தோம். டவுன் சமீபித்த உடனே வண்டிகளும்ஒழுங்காகவும் மெதுவாகவும், அதிபரவர்கள் ஏறிவந்தவண்டி முன்செல்லவும் ஒன்றன் பின்னால் ஒன்றாக தொடர்ந்து போயிற்று. பின் முக்கிய வீதிகளின்வழியாக ஊர்வலமாக 7 மணிக்கு வந்திறங்கினார்கள்.

## அருப்புக்கோட்டை, முதலாளி மு. மு. முத்துசாமி நாடாரவர்கள், ஞாபகச்சின்ன வாசகசாலை ஸ்பெஷல் மீட்டிங்.

நாளது 16-3-23 யில் "நாடார்குலமித்திரன்" அதிபரவர்கள் வரப்போவதாக அறிந்த உடனே, அன்று காலையிலே நம் மகாஜனங்களுக்கு அறியும்வண்ணம் நமது வாசகசாலையின்சார்பாக துண்டுநோட்டீஸ் பிரசுரிக்கப்பட்டிருந்தது.மறுபடியும் மாலையில் அவர்கள் வந்திறங்கும் முன்னமேயே,நமதுவாசகசாலையின்மீட்டிங் அழைப்பு நோட்டீஸ்கள் வழங்கப்பட்டு, நமது அதிபரவர்களும், கனம் பிள்ளையவர்களும் தங்கள் நீண்ட பிரயாணத்தில் கண்ட காக்ஷிகளைப் பற்றி விபரமாகச் சொல்லுவதைக் கேட்டு ஆனந்திக்கத் தக்கவாறு சரியான காலத்தில் எல்லோரும் தவறாது ஆஜராகும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றிரவு சரியாய் 8½ மணிக்கு, நாடார்கள் எலிமெண்டரி பாடசாலையில் கூட்டம் ஆரம்பமாகிற்று. அவ்வமயம் சைவட்ட ஒஷத்திரிய ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் கனம் S. இராமசாமி அய்யரவர்கள் B. A. L. T. அக்கிராசனம் வகித்தார்கள். வாசகசாலையின் காரியதரிசி மிஸ்டர் சக்கரைப்பாண்டியாவர்கள், கனம் பிள்ளையவர்களுக்கும் அதிபரவர்களுக்கும், வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். அதன் பின், நமது மித்திரன் உப-பத்திராதிபரும், வாசகசாலையின் நிர்வாக உப-அக்கிராசனருமான ஸ்ரீமான் ஆ. சொக்கலிங்கபாண்டியாவர்கள் "பிரயாணத்தாலாகிய பயன்" என்பதைப்பற்றி, வாசாமகோசரமாகவும், சாங்கோப சாங்கமாகவும் சுமார் ஒருமணி நேரம் வரையில் உபந்நியாசம் செய்தார்கள். (இடைக்கிடையே நம்குல மாணவிகளால் இன்பமான பாட்டுகளும் தேவாரங்களும் பாடப்பட்டன) அதன் பின், தாயம்மாள் என்ற மாணவியால் "அன்பு" என்பதைப்பற்றி நீண்டதோர் நிரூபம் வாசிக்கப்பட்டபின் டி மாணவியால் அதிபருக்கும்கனம்பிள்ளையவர்களுக்கும்மங்களவாழ்த்துக்களும்கூறிமுடிந்தஉடனே, பலத்தகரகோஷத்தினிடையே, நாடார்குல மித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடாரவர்கள் எழுந்து சுற்றுப்பிரயாணத்தில் தான் கண்ட காக்ஷிகளைப் பற்றி வெகு உற்சாகத்துடன்பேசினார்கள். (இடைஇடையே "கேளுங்கள்" "கேளுங்கள்" என்ற வார்த்தை சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு சபையினின்று எழுந்து கொண்டேயிருந்தது) அவர்முக்கியமாக குறிப்பிட்டதாவது:- "நான் சுற்றுப்பிரயாணத்திற்கு புறப்பட்ட தேதியிலிருந்து நான்கண்ட காக்ஷிகளையும், என்மனதில் நிகழ்ந்த எண்ணங்களையும்அவ்வப்பொழுது குறித்து எழுதி வைத்திருக்கும் விஷயங்களை கூடிய சீக்கிரம் ஒரு புஸ்தக ரூபமாய் வெளியிடப்போகிறேன். அதன் ஒரு பாகத்தையே இன்று இங்கு பேசியிருக்கிறேன்." அதன் பின் கனம் T. கருப்பையா பிள்ளையவர்கள், "அந்நியநாட்டில் நம் சமூக நிலைமை" என்பதைப்பற்றி வெகுசவிஸ்தாரமாகப்பேசிமுடித்தார்கள் கடைசியாக அக்கிராசனர் சிறிதுநேரம் முடிவுரையாகப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன், சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் கலைந்தது என்று காரியதரிசிகளான கனம் ச. சிதம்பர நாடாரவர்களும்,மிஸ்டர்சக்கரைப்பாண்டியரும் எழுதுகிறார்கள்.

## சந்தா நேயர்களுக்கு அறிக்கை.

நமது மித்திரன் நான்காவது வருடம் நாளது துந்துபிஷு ஆவணிமீ 1-9-22 முதல் ஆரம்பமானது முதற் கொண்டு சந்தாத் தொகையை நேரிலும், நமது ஏஜெண்டுகள் மூலமாயும், வி பீ. மூலமாயும் வசூலித்துக்கொண்டுவந்தோமாயினும், இடையில் நமது சந்தா நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து சிறிது காலம் கிராமாந்திரங்களுக்கு மட்டும் வி. பி. போடுவதை நிறுத்திவைத்திருந்தோம். ஆனால் கடந்த ஒரு மாதகாலமாய் மறுபடியும் வி. பி. போட்டுக் கொண்டு வருகிறோம். நமது சந்தா நேயர்களில் சிலர் வி. பி. யை திருப்பி விட்டிருக்கிறார்கள். காரணம் தெரியவில்லை. நாம் 4-வது ஆண்டு ஆரம்பத்திலேயே வேண்டாதோர் நிறுத்திக்கொள்ளுவதற்கு வாய்தாக்கொடுத்து எச்சரிக்கையும் செய்திருந்தோம். பின்னும் இது பற்றிய பல அறிக்கைகளும் அடிக்கடி மித்திரனில் வெளியிட்டிருந்தோம். அப்படியிருந்தும் வி. பி. திரும்பிவருவது ஆச்சரியமாயிருக்கிறது இதை வேண்டுமென்று செய்திருப்பார்கள் என்று நம் பக்கூடவில்லை. வேறுமென்று செய்ய நேர்ந்திருக்குமானால் இது குல தருமத்திற்கும் சத்தியத்திற்கும் ஏற்றதல்லவென [illegible] கிறோம். பத்து மாதம் பத்திரிகையை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## செய்தித் திரட்டு.

### ஆரியபால கானசபா.

நாடகாசிரியர் ச. சு. சங்கரலிங்கநாடாரவர்களின் ஆரியபாலகான சபையாரால் போடிநாயக்கனூர், விக்டோரியா மிமோரியல் ஹைஸ்கூலின் அபிவிருத்திக்காக 15-3-23ல் "பெரோஜிஷா தூர்ஜஹான்" என்னும் நாடகம் நடத்தி அதன் வருமானத் தொகையை ஷை ஸ்கூலுக்கு இனாமாகக் கொடுத்தார்கள். இச்சபையார் இவ்வூரிலிருந்து சிவகாசிக்குப் போகின்றனர். நாடகாபிமானிகள் பலரும் வேண்டிய முயற்சி செய்து இச்சபாபிவிருத்தியைக் கோருவார்களாகவும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

*
* *

### கமுதி.

இவ்வூரில் நவம்பர் மீ 29, 30உயில் பெய்தமழையினால் ஆற்றில் ஏராளமான ஜலம் வந்து ஆற்றுக்கரை டிசம்பர் மீ 1உ வெள்ளிக்கிழமையன்று உடைந்தது. அதன்பயனாக ஊர் ரொம்ப கேவலமான நிலைமையில் இருக்கிறது. ஷை கரையை அடைத்தால் ஊருக்கு அதிக அபாயமாக இருக்காது. [illegible] அடைக்காமல் உடைப்பில் இருபக்கமும் இருக்கவர்கள் நின்று உடைப்புப் பக்கமே எப்பொழுதும் தண்ணீர் போய்க் கொண்டிருக்கும்படி விட்டு ஜனங்களின் போக்குவரத்து சௌகரியத்திற்கு சிறு பாலம் ஒன்றும் கட்டவேண்டியது முக்கியம். கமுதிக்கும், பார்த்திபனூருக்கும் ரோட்டுமிகவும் கேவலமான ஸ்திதியிலிருக்கிறது. ஜனங்கள் போக்குவரத்துக்கு அதிக கஷ்டப்படுகிறார்கள். காருண்ய கவர்ன்மெண்டார் இவ்விரண்டு விஷயங்களையும் கவனித்து ஜனங்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஷையூரில் நமது க்ஷத்திரிய வித்தியாசாலையில் 26-2-23 யில் திங்கட்கிழமை காலை 11-மணிக்கு; மானேஜிங் கமிட்டி பிரஸிடெண்டு ஸ்ரீமான் சி. பெ. சிவசங்கர நாடார் அவர்கள் மனைவி (18-2-23)யில் மரணம் அடைந்த விஷயமாய் ஷை கமிட்டி அங்கத்தினர் உபாத்தியாயர்கள் ஸ்கூல்மாணவர்களுடன் எல்லோரும்கூடி 2-நிமிஷம்வரைவகோபித்து நின்று அனுதாபங்காட்டி அப்பால் உபாத்தியாயர்கள் ஷை அனுதாப விஷயமாய் பேசினார்கள் அன்று மாலை மாணவர்களுக்கு விடுமுறை நாளாக விடப்பட்டது என்று ஸ்ரீமான் ச. வீ. வீரப்ப நாடார் எழுதுகிறார்.

*
* *

### மதுரை, கீழப்பேட்டையும்.

#### நாடார்களின் ஒற்றுமைக் குறைவும்.

விருதுபட்டி, அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி நாடார்களின் ஆதீனத்திலிருந்துவரும் ஷை கீழப் பேட்டையானது, சுமார் இரண்டு வருஷகாலமாகக் கவனிப்பாரின்றிருக்கிறபடியால் பலவிடங்களில் இடிந்தும் ஆடு மாடுகள் தங்குவதற்கிடமாகவும், சுத்த ஆபாசமாகவுமிருக்கிறது. மதுரை நாடார் ஊழியப்பிரசுரசபையாரால் ஷை பேட்டையின் நிர்வாகக் குறைவைப் பற்றி நம்குல பத்திரிகைகளில் எழுதியும் பிரசுரங்கள் வெளிப்படுத்தியும் ஷை யூர் நாடார்கள் கவனித்தபாடில்லை. சீக்கிரத்தில் ஷை பேட்டையானது மதுரை முனிசிப்பாலிட்டியாரால் சேர்த்துக் கொள்ளப்படுமென்ற வதந்தியுமுண்டாகிறது. வதந்தியும்உண்மை யென்றே தெரியவருகிறது. ஆகையால், விருதுபட்டி, அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி நாடார்கள் ஷை பேட்டையை சீர்திருத்தஞ் செய்வதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் உடனே செய்ய வேண்டும். ஒற்றுமைக் குறைவால் பொதுக்காரியத்திற்கு ஹானிவந்து விடுமென்பதை ஷையூர் நாடார்குல கனவான்கள் உணரவேண்டும்.

இந்நிருபத்தைக் கண்டபின்னும் ஷையூர் நாடார்கள் வாளாயிருப்பார்களாயின் ஷை பேட்டையை சீர்திருத்தஞ் செய்வதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் உடனே மாக்ஷிமை தங்கிய நாடார் மகாஜன சங்கத்தார் செய்யவேண்டுமென்று பன்முறை நமஸ்கரித்துக் கேட்டுக் கொள்ளுகிறோமென்று ஸ்ரீமான் கூ. அ. சங்கரலிங்க நாடார் எழுதுகிறார்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

18-12-22 முதல் 28-2-23 முடிய

ஸ்பெஷல் சந்தா வரவு:—

| விபரம். | ரூ. அ. பை |
|---|---|
| பிறங்கு | 48—0—0 |
| திருமலாபுரம் | 12—0—0 |
| கடம்பூர் | 12—0—0 |
| மதுரை | 12—0—0 |
| கள்ளிக்குளம் | 12—0—0 |
| விருதுபட்டி | 239—0—0 |
| நல்லகட்டிபாளையம் | 12—0—0 |
| ஆக மொத்தம் ரூ. | 347—0—0 |

ஆர்டினரி சந்தா வரவு:—

| | |
|---|---|
| பிறங்கு | 87—0—0 |
| திருமலாபுரம் | 10—0—0 |
| கோவில்பட்டி | 1—0—0 |
| விருதுபட்டி | 104—0—0 |
| மம்சாபுரம் | 1—0—0 |
| இராஜபாளையம் | 10—0—0 |
| முகவூர் | 3—0—0 |
| மதுரை | 2—0—0 |
| திருமங்கலம் | 1—0—0 |
| பாம்பன்குளம் | 12—0—0 |
| அருப்புக்கோட்டை | 21—0—0 |
| கமுதி | 15—0—0 |
| பெருமாள் கோவில் | 3—0—0 |
| பணக்குடி | 26—0—0 |
| வடக்கன்குளம் | 25—0—0 |
| சிவகாசி | 24—0—0 |
| கோனம்பட்டி | 8—0— |
| திருச்சுழி | 16—0—0 |
| கோரியூர் | 1—0—0 |
| கலந்தபனை | 1—0—0 |
| ரோஷன் மியாபுரம் | 1—0—0 |
| வடலிவிளை | 4—0—0 |
| சாத்தூர் | 27—0—0 |
| நடுச்சூரான்குடி | 1—0—0 |
| கண்மாய்ச் சூரங்குடி | 5—0—0 |
| கொழும்பு | 6—0—0 |
| தூத்துக்குடி | 1—0—0 |
| குளத்தூர் | 6—0—0 |
| பேரிலோவம்பட்டி | 10—0—0 |
| சிவசுப்பிரமண்யபுரம் | 4—0—0 |
| பத்திரகாளிபுரம் | 10—0—0 |
| ஆவரைக்குளம் | 16—0—0 |
| பிள்ளையார் குடியிருப்பு | 9—0—0 |
| சிதம்பரபுரம் | 4—0—0 |
| யாக்கோபுரம் | 2—0—0 |
| கன்னங்குளம் | 13—0—0 |
| செட்டிக்குளம் பண்ணையூர் | 23—0—0 |
| கூடங்குளம் | 24—0—0 |
| அம்மாபட்டி | 1—0—0 |
| ஆண்டிபட்டி | 2—0—0 |
| திருநெல்வேலி பாலம் | 1—0—0 |
| ஆக ரூ. | 541—0—0 |

நன்கொடை வரவு:—

| | |
|---|---|
| கோரியூர் | 1—0—0 |

தலைக்கட்டுவரி வரவு:—

| | |
|---|---|
| விளாம்பட்டி | 13—0—0 |
| செவல்பட்டி | 15—0—0 |
| கொட்டைமடக்கிப்பட்டி | 3—0—0 |
| கோரியூர் | 17—0—0 |
| மேலக்கடம்பங்குளம் | 25—0—0 |
| கலந்தபனை | 60—0—0 |
| ரோஷன்மியாபுரம் | 40—0—0 |
| வடலிவிளை | 28—0—0 |
| திருமலைபுரம் | 17—0—0 |
| பாம்பன்குளம் | 16—0—0 |
| கள்ளிக்குளம் | 41—0—0 |
| மேலக்கள்ளிகுளம் | 9—0—0 |
| விருதுபட்டி | 810—0—0 |
| ஆக மொத்தம் ரூ. | 1094—0—0 |

கிளைச்சங்க ரிஜிஸ்டர் வரவு.

1. பாம்பன் குளம் என்று பெயர் வழங்கிய பசும்பொன் நகரம், பாண்டியகுலம் நாடார் தருமபரிபாலன சங்கம் ரூ 3—0—0
2. பெருமாள் கோவில், க்ஷத்திரிய நாடார் தருமபரிபாலன சங்கம் ரூ 12—0—0
3. பணக்குடி நாடார் க்ஷத்திரிய ஐக்கிய சங்கம் ரூ 3—0—0
4. வடக்கன்குளம், நாடார் க்ஷத்திரிய ஐக்கிய சங்கம் ரூ 3—0—0
5. கோரியூர், க்ஷத்திரிய நாடார் சமரசசன்மார்க்க சங்கம் ரூ 3—0—0
6. மேலக்கடம்பங்குளம் நாடார் க்ஷத்திரியாபிவிருத்தி சங்கம் ரூ 3—0—0
7. கலந்தபனை க்ஷத்திரிய நாடார் தருமபரிபாலனகல்வி அபிவிருத்தி சங்கம் ரூ 3—0—0
8. ரோஷன்மியாபுரம் நாடார் க்ஷத்திரிய நாகரீக அபிவிருத்தி சங்கம் ரூ 3—0—0
9. கள்ளிக்குளம், அர்ச்சூசையா நாடார் ஐக்கிய சங்கம் ரூ 3—0—0
10. வத்திராயிருப்பு, நாடார் மஹாஜன கிளைச் சங்கம் ரூ 3—0—0
11. பாட்டக்குளம், பாண்டியகுல பால்ய நாடார் கிளைச்சங்கம் ரூ 3—0—0
12. பேரிலோவம்பட்டி நாடார் பால்ய சங்கம் ரூ 3—0—0
13. பத்திரகாளிபுரம், க்ஷத்திரிய நாடார் பரிபாலனபஜனை சங்கம் 3—0—0
14. ஆவரைக்குளம், க்ஷத்திரிய நாடார்பரிபாலனகிளைச்சங்கம் ரூ 3—0—0

ஆக மொத்தம் ரூ. 51—0—0.

## வித்தியாசாலை.

### வருடப் பூர்த்திக் கொண்டாட்டம்

#### அருங்குளம்.

நாடார் க்ஷத்திரியா வித்தியாசாலை முதல் வருடப் பூர்த்திக் கொண்டாட்டம் 25-2-23 ஞாயிற்றுக்கிழமை மாலை 2½ மணிக்குஷைகிராமம் பிரதமஜியாயாதிபதி ஸ்ரீமான் S. S. சுப்பா நாயக்கரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சுமார் 250 ஜனங்கள் கூடியிருந்தார்கள். வித்தியாசாலை மானேஜர் ஸ்ரீமான் V. K. வெற்றிவேல் நாடாரவர்கள் வந்தனோபசாரப் பத்திரமும் வித்தியாசாலையின்வரவு செலவு அட்டவணையும் வாசித்தார்கள் அதன்பின் அக்கிராசனாதிபதியவர்கள் நாடார் மகாஜன சங்கங்களுடைய நன்னோக்கங்களையும் கல்வி முன்னேற்றத்தையும்பற்றி வியந்துபேசினார்கள். அதன் பின்னர் ஸ்ரீரெங்கபுரம் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் குருநாதய்யரவர்கள் கல்வி என்ற விஷயத்தைப்பற்றியும் நம்குலத்தவர்கள் கல்வி யபிவிருத்தியின் முன்னேற்றத்தையும் வெகு விமரிசையாய் பேசினார்கள். அத்துடன் ஆ. அகிலாண்டபுரம் ஸ்ரீமான் A. ஆவுடையப்ப பிள்ளையவர்கள் அதை தொடர்ந்து பேசினார்கள். ஷை யார்களால அக்கிராசனாதிபதியவர்கள்பேரிலும் வித்தியாசாலையின் பேரிலும் ஓர் நவீன அகவல் வாசிக்கப்பட்டது. அத்துடன் அதை தொடர்ந்து நமது வித்தியாசாலை ஹெட்மாஸ்டர் R. ராமபத்திரய்யரவர்கள் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். அதன்பின் மாணவர்கள் "தெய்வபக்தி" "குருபக்தி" என்ற வியாசங்கள் வாசித்தார்கள். ஷை மாணவர்களால் மூவரும் வந்தால் முடிப்புவரும் என்ற கதையை சங்கீத கோஷத்துடன் நடித்துக்காட்டினார்கள். 4-30 முதல் 5-30 வரை பந்தய விளையாட்டுகள் அதாவது:-பந்தய ஓட்டம் முதலிய விளையாட்டுகளையும் செய்து முடித்த பின்னர் மாணவர்களுக்கு அக்கிராசனாதிபதியவர்கள் பரிசு அளித்தார்கள். அதன்பின் க்ஷத்திரிய வாலிப சங்கத்தின் செக்ரட்டரி V. K வெள்ளையப்ப நாடாரவர்கள் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் சபைக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டது. மாணவர்களால் இராஜ வாழ்த்துடன் சந்தன தாம்பூலாதிவழங்கப்பட்டு சபை கலைந்தது என்று ஸ்ரீமான் நல்லழகு நாடார் எழுதுகிறார்.

## பொதுவர்த்தமானம்

### ஸ்திரீகளின் துயரம்.

கள்ளிக்கோட்டை ஏர்நாடு தாலுக்கா வாசிகளாகிய 384 மாப்பிள்ளைமார் ஸ்திரீகள் இராஜப்பிரதிநிதியவர்க்கு ஒரு மனு விண்ணப்பித்திருக்கிறார்கள். அதில் குறிப்பிடுவதாவது:- மாப்பிள்ளை கலகம் நடந்து வெகு நாளாகியும் இன்னும் போலீஸார் வீண்புகார்களை சுமத்தி கலகத்தில் சம்பந்தப் படாதவர்களையும் அரஸ்டுசெய்து கஷ்டப்படுத்துவதினாலும் அதிகாரிகள் சிறிதும் இரக்கம் காட்டாமல் நடந்து வருவதினாலும்ஜீவிக்கவேண்டிய வழியுமில்லாதிருக்கிறது. ஆகையால் பட்சபாதமற்ற ஒரு கமிட்டி ஏற்படுத்தி அரஸ்டு செய்யப்பட்டதையும் தண்டனை விதிக்கப்பட்டதையும் மீண்டும் விசாரணைசெய்து அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்பதே.

### மறவர்குல முன்னேற்றம்.

#### நல்லபிரசாரம்.

தென்திருவிதாங்கூரில் காஞ்சி நாடென்னும் பகுதியில் மறவர்குல அபிவிருத்தி சங்கம் ஸ்தாபித்து தங்கள்குல முன்னேற்றத்தின்பொருட்டு மிகுந்த பிரசாரஞ் செய்யப்பட்டுவருகிறது. இது நல்ல ஏற்பாடுதான். இதன்படி பாண்டியநாட்டிலுள்ள மறவ மகாஜனங்களும் தங்கள் முன்னேற்றத்தின்பொருட்டு, ஒரு சங்கம் ஸ்தாபித்து தீவிரபிரசாரஞ்செய்து நற்பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.

### பூமியின் கீழோடும் ரெயில்வேக்கள்.

லண்டன் நகரில் பூமியின் கீழோடும் ரெயில்வேக்கள் மூலமாகச் சென்றவருஷத்தில் சென்ற பிரயாணிகளின் சங்கியை 117200,0000 அதற்கு முந்திய வருஷத்துக் கணக்கைக் காட்டிலும், 2000000 பேர் அதிகமாயிற்றாம்.

### 100000-பேர்க்கு விருந்து.

அமெரிக்காவிலுள்ள ஒக்லாஹோமா என்ற ஸ்டேட்க் கவர்னர் வாலடன் என்பவர் தனது தேறுதலை முன்னிட்டு ஏககாலத்தில் 100000 பேர்க்கு விருந்தளிக்கத்தக்கவாறு சகல வசதிகளுடன் ஏற்பாடு செய்து பற்பலபகுதிகளிலுள்ள உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர், வியாபாரி, மாணவர்களாகியவர்களுக்கெல்லாம் அழைப்புக் கடிதங்களை அனுப்பி, ஏககாலத்தில் 100000 பேர்களும் விருந்துக்கு வீற்றிருந்து அமுது அருந்தியதைக்கண்டு ஆனந்தித்தாராம். உலக சரித்திரத்திலேயே இது ஒரு பெரிய விருந்தாகக்கருதப்படுகிறதாம்.

### ஜெர்மன் நஷ்ட ஈடு,

மகா யுத்தத்தில் ஜெர்மனிக்குச் செலவான யுத்த தொகை மொத்தம் ரூ 50,000,000,000.

லண்டன் 'டெயிலி ஹீரால்டு' பத்திரிகை ஜெர்மனியிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகரிடமிருந்து கிடைத்தபின் கண்ட விபரங்களைப் பிரசுரித்திருக்கிறது:—

நஷ்டஈட்டுக் கமிட்டியார், 1922-ம் வருடம் அக்டோபர் மாதம் வெளியிட்ட அறிக்கையில், ஜெர்மனி சென்றவருடம் ஜூலை மாதம் முடிய உள்ள காலத்தில் நேசதேசத்தினருக்குக் கொடுத்ததொகை ரூ 399 6351500. மேலும், மேற்கண்ட காலவரையறையிலேயே ஐக்கியஅரசினரின் சேனைகள் யுத்தப்பிரதேசத்தில் பந்தோபஸ்தின் பொருட்டு இந்தவகையில் ஜெர்மானியர் கொடுத்தது ரூ 60,101,1900 யுத்த சம்பந்தமானபிரத்தியேக வியாரணைகள் முதலானவற்றில் ஜெர்மனி கொடுத்திருப்பது ரூ 20,90,0000.

ஆகவே இவ்வகையாக ஜெர்மனி நேசதேசத்தினருக்குக் கொடுத்திருக்கிற தொகை ரூ 476,73,63400 ஆகிறது.

மேற்காட்டிய தொகை ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் ஓர் பாகத்திய செலவை மாத்திரம் கூறினோம் அதற்கேர்பட்டிருக்கிற இதர செலவுகள்:—

அந்நிய நாட்டுக்கு உதவிசெய்த வகையில் ரூ 5,85,000000.

தனது சிநேகித அரசாங்கங்களுக்கு கடன் கொடுத்த வகையில் ரூ 850,000 0000.

நிலக்கரி வகையில் ரூ 55,0000000.

தனது சொந்தப் பிரதேசங்களை இழந்த வகையில் ரூ 32,50000000.

மற்றும் சில்லரை வகையாயும் சேர்த்து மொத்தம் ரூ 1315,0000000.

இது போக, ஜெர்மனியின் சொந்தப் பிரதேசங்களாகிய அப்பர்சைலீஷியா பொஸ்னேனியா, கிழக்கு பேர்க்கு புருஷியா இவைகளில் கொடுமையான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மன் பிரதம மந்திரியாகிய மிஸ்டர் ராத்தினோவோ என்பவர் ரீச்ஸ்டாக் சபையில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் 5000000 0000 ரூபாய்க்குமேலென்று கூறினார்.

## ஈகை.

ஈகையாவது இரப்போர்க்கு ஈதலாம் அறநெறியில் தான் சம்பாதித்தபொருளை வேண்டியவர்க்குத் தன்னாலியன்றளவும் கொடுத்து அவரைக் காப்பாற்றி அவரிடமிருந்து பிரதியுபகாரத்தை விரும்பாமலிருத்தலாம். பசியால் வருந்தி கந்தாசி அழுக்கடைந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு நடக்கச் சக்தியற்றுக் கோலூன்றித்தள்ளாடித் தள்ளாடித் தயங்கி, சூரிய வெப்பத்தைப் பொருக்கமாட்டாமல் சிற் சமயங்களில் விழுவதும் மறுபடியும் எழுந்து நடந்து நிதியைக் கைக்கொண்ட செல்வந்தரில்லத்தில் விழுந்து, தனக்குஏதாவது கொடுக்கும்படி கேட்கும் பொழுது, இல்லையெனசொல்லாமல்அவனுடையமனதுதிருப்தி யடையும்வண்ணம்அக்கருணாகரன் கொடுப்பானுகில், அவ்வருங் கலத்தை யணிந்துகொண்ட இரப்போன் அதை அருமருந்தெனத் தனதுள்ளத் துண்ணிமகிழ்ந்து தனக்கீந்த குலனுடையான் கண் கருணையே உருக்கொண்டதென வெண்ணி நாம் இதற்குப் பிரதியுபகாரமெப்பொழுது செய்யப்போகிறோமென்று சந்தேகித்து அப்புண்ணியவானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துச் செல்கின்றான். மேற்கூறியவாறு இலனென்று கூறாமல் கொடுப்பதே ஈகை என்பது.

"இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங்கூறு
திரப்பினை மிரப்ப னன்று மிதனினன் றுவதாகு
மிரப்பவ னிலனென்றுர வியம்பியவெவ் வங்சொல்லென்
றிரப்பினும் பிறர்பாற் கூறுநிரக்கமோ மதன் மைந்தா"

என்று விநாயக புராணத்திற் கூறப்பட்டிருக்கிறது. அதாவது: தன்னிடம் வந்து ஒரு பொருளை யாசிப்பவன் தான் நாடிவந்த பொருளைப் பெறுதபடிச் செல்லும்படி என்னிடமில்லை என்று இழிமொழியைக் கூறாமல் அந்த யாசகனது பொருளில்லாமைக் குறையைநீக்கி அவனைத் திருப்திப்படுத்துதல் நன்றாகும். யாசிப்பவன் பொருளில்லேனெனக்கூறும் இழிமொழியை எவரேனும் சொல்லச் சொன்னாலும், அதைச் சொல்லாமல் அவனுக்குசந்த பொருளைக்கொடுத்தனுப்புவது அதனினும்மேலானதாம். இன்னும்

"நல்லாறெனினுங் கொளல் தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" என்றும்,

"இலனென்னு மெவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணேயுள" என்றும்,

மேற் சொன்ன கருத்துக் கிசைந்தவாறு கூறப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவரும் ஈகைக்குணத்தை யேன் அடைய வேண்டுமெனில்,

"கொடையே யெவர்க்கும் எப்பேறுங் கொடுக்கும் நெறியிற் பிறழாத
கொடையே யாருந்தன் வழியிநெழுகச் செய்யுங் குறைதீர்த்த
கொடையே பகையை யுறவாக்குங் குலவும் பூதமனைத்தினையுங்
கொடையே புரக்குமென்றுள்ளங்கொள்ளப் புகன்றான் கவுதமனே."

என்று காஞ்சிப் புராணத்தில் சிவஞான யோகிகள் கூறியபடி ஈகை யென்று வழங்கப்பெறும் கொடையே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கிறது. எவருந்தன்னையே அனுசரித்து நடக்கச் செய்கிறது. பகைவரையும் உறவினராகச் செய்கிறது. உலகத்தில் வாசஞ்செய்யும் கோடாகோடிப் பிராணிகளைக் காக்கிறது. இன்னும் வறுமையென்னும் அந்தகாரத்தில் மூழ்கியுள்ளோர்க்குச் சுடர்மணி போன்றது. கலங்கிப் பாவத்தினின்றும் நீக்குவது. சாஸ்திரங்களில் தன்மனதைத் திருப்பமுடியாதொருவனைத் திருப்பி நல்வழிக்குக் கொண்டுவருவது; கொலைஞரையும் கள்ளுண்போரையும் பாவத்தினின்றும் விலக்குவது; செய்நன்றியை அறியத்தூண்டுவது; இல்லறத்தை நல்லறமாக நடத்துவது; புறக்கணிக்கப் பட்டோரை திருமறையை யறியச்செய்வது; மாட்சிமை தங்கிய மோட்ச மார்க்கத்தைக் காட்டுவதற்கும் சாதகமாகிறது.

(இன்னும் வரும்)

க. சொ. அ. ஞானகிரி நாடார்,
சிவகாசி.

## வர்த்தகம்.

இப்பூவுலகில் எப்பாகங்களிலும் மானிடர்களுக்கு ஆதாரவாயுள்ள தொழில், வர்த்தகம், கைத்தொழில்,விவசாயம். இம்மூன்று தொழில்களும் எத்தேசங்களிலும் எவ்விதமேனும் யிருந்தே தீரும். வர்த்தகம் கைத்தொழில் இவ்விரண்டைக் காட்டிலும் விவசாயமே ஒரு தேசத்திற்கு மிகவும் ஆதாரவுள்ளது. ஆனால், செல்வமிகுந்த நாடுகளில் வர்த்தகம் கைத்தொழில் விசேஷமாயிருக்கும்.

வர்த்தகமாவது; பணத்தைக்கொடுத்து அநேகவிதமான பொருள்களை கிரையத்திற்கு வாங்கிமறுபடிவிற்பதே. சுருங்கச் சொன்னால் பண்டம் மாற்றுதலையே வர்த்தகமெனப்படும். நம் தாய்நாடு கல்வி கைத்தொழில் வர்த்தகத்தில் மிகவும் மேன்பாடடைந்ததல்ல வென்பதை யாவரும் நன்குணர்வோம். அதற்கு காரணம் கல்வியே. நம் நாட்டில் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை கல்விச் சாலைகளில் சேர்த்து கல்விகற்கவைக்கும் பொழுது தங்களுடைய மக்கள் இரண்டெழுத்துக்களை வாசிக்கத் தெரிந்தால் போதுமென்று நினைத்து பள்ளிக்கூடங்களிலிருந்து விலக்கிவிடுகிறார்கள். பின்னைகளோ சிலர் கடைகளிலிருந்து வியாபாரத்தொழிலை கற்றுக்கொள்கிறார்கள். சிலர் பள்ளிக்கூடங்களிலிருந்து விலகினவுடன் விவசாயத்தொழில் செய்கிறார்கள். இவர்கள் தொழில்களை கவனித்துக்கொண்டு படிப்பை மறந்து விடுவதோடு கடைசியில் தன்னுடைய கையெழுத்து போடத்தெரியாத நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். பிள்ளைகள் முன்னேற்ற மடையும்படி செய்வது பெற்றோர் கடமையல்லவா? மேல்நாட்டார்கள் தங்களுடைய குழந்தைகளை கலாசாலையில் சேர்த்து படிக்கவைக்கும்பொழுது தங்களாலியன்றமட்டும் உயர்தரகல்வி கற்கவைத்து, அன்னவர்கள் கல்வி கற்கும் பொழுதே அவர்களுடைய குணநிசயங்களையும் செய்கைகளையும் புத்திப்போக்கையும் அறிந்து எத்தொழில்களில் அவர்களுடைய மனமானது பற்றி நிற்கின்றதோ அத்தொழிலையே பழக்கிவைப்பார்கள். ஆதலால், மேல் நாட்டார்கள் எவ்வித தொழில்களிலும் முன்னேற்றமடைந்திருக்கிறார்களென்றுநமக்குஉள்ளங்கை நெல்லிக்கனிபோல்விளங்குகிறது. நம் தாய் நாட்டில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு தாய்பாஷையே அநேகர்க்குத் தெரியாமலிருக்கும். அப்படியே ஒருக்கால் தெரிந்திருந்தாலும் தன்னுடைய கையெழுத்துமட்டும்போட்டுக்கொள்வார்கள். இத்தன்மையுள்ளவர்கள் வியாபாரம் செய்வதில் பெரும்பாலும் லாபம் கிடைத்துவிடுமென்று நம்ப முடியாது. மேல்நாட்டார்கள் பெரும்பாலும் கூட்டு வர்த்தகக் கம்பெனிகளைத்தான் ஸ்தாபிக்கிறார்கள். மேலும் ஏராளமான பங்குகளைச் சேர்த்துக்கொண்டு தாராளமாகவர்த்தகஞ்செய்கிறார்கள். மேலும் பொதுப்பட ஒரு பேர்வைத்து லிமிட்டெட் கம்பெனி யென்று போட்டுக்கொண்டு நடத்துவார்கள். எந்தக் காலங்களில் என்னென்ன சாமான் அதிகமாய் விலையாகின்றதோ அந்த சாமான்களில் ஆதாயம் அதிகமாய்வைத்து விற்கவேண்டும். பிரியமில்லாத சரக்குகளில் சொற்பலாபம் யேற்படுத்தி விற்பனை செய்யத் தயாராயிருக்கவேண்டும். வியாபாரிக்குள் ஒற்றுமைவேண்டும். ஆயிரக்கணக்கான பேர்கள் பங்குகள் சேர்த்து எவ்விதமான வியாபாரத்தையும்மனஊக்கமாய்செய்து லாபம் அடைகிறதை யறியாதவர் யாவர்? நாமும் மேல்நாட்டார்களைப்போல் வியாபாரத்தில் போட்டி போடவேண்டியதிருக்கிறது. ஆகையால் கல்வி, கைத்தொழில் வர்த்தகத்தில் முன்னேற்ற மடைவதற்கு நம்மக்களை உயர்தர கல்வி கற்கவைப்பது நமது கடமையாகும்.

P. M. பொன்னுச்சாமி பாண்டியன்
இரங்கூன்.

## இலங்கை வர்த்தமானம்.

(நமது நிருபரிடமிருந்து)

### ரயில்வே இலாக்கா.

இலங்கை ரயில்வே இலாக்காநிர்வாகிகள் தங்கள் வேலையை பொதுநலங்கருதி ஊக்கத்துடன் உழைத்தபாடில்லை. கடந்த ஆறு வாரங்களுள் எத்தனையோ ரயில்வே விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. இரண்டு ரயில்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு சேதமடைந்தன. ஒன்று தண்டவாளத்தைவிட்டு தவறிவிட்டது. பேராதெனியா என்னு மிடத்தில் ஒரு இஞ்சின் இன்னொரு புகை ரதத்துடன் மோதிக்கொண்டது! மற்றொரு முறை இஞ்சினுக்கு நெருப்பு போடுகிறவர்கள் வசம் ஒப்பித்துவிட்டு, ஓட்டுபவன் ஓடிப் போய்விட்டான். நேற்று (9-3-23) மீண்டும் இஞ்சினொன்று இரட்டைமாட்டு வண்டியுடன் மோதி, அதின் பலனாக 4 சிங்களவர் உயிர் துறந்தனர். ஒருவனுக்கு கடோமான காயம் பட்டதினிமித்தம் அனுராதைபுரம் ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை செய்யப்பட்டு வருகிறான். இஃதிங்ஙனமிருக்க 19-ம் தேதி முதல் இந்தியாவுக்கு ரயில் இரவில்தான் பிரயாணப்படுமென்று விளம்பரஞ் செய்திருக்கின்றது இத்தகைய விபத்துக்கள் எதிர் காலங்களில் அடிக்கடி நேர்ந்து கொண்டிருப்பின் எங்ஙனம் பிரயாணிகள் ரயில் வழியாய் பயமின்றி பிரயாணம் செய்யக் கூடும்.

⁂

### ரயில் வருவதைக் கணிப்பதற்கான யந்திரம்.

ரயில்வே விபத்துகள் அடிக்கடி நேர்ந்து வருவதை உத்தேசித்து ஒரு ஸ்டேஷனுக்கும் இன்னொரு ஸ்டேஷனுக்கும் மிடையில் ரயில் வந்துகொண்டிருப்பதைக் காண்பிக்க கொழும்பு கோட்டை ஸ்டேஷனில் அரசாங்கத்தார் ஒரு யந்திரம் அமைத்திருக்கிறார்கள். ரயில் குறித்த எல்லைக்குள் வந்தவுடன் ஒரு விதமான ஒளி யந்திரத்தில் வீசுகிறது ரயில் சென்றவுடன் இவ்வொளியும் மறைந்துவிடுகிறது. இத்தகைய யந்திரத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் ரயில் வந்துகொண்டிருப்பதை யறிந்து, எதிரே யிருந்து மோசடிகள் வராமல் தடுக்கலாம். ஆனால் அபாயமொன்றிருப்பதை அறிந்த ஸ்டேஷன் மாஸ்டர் கார்டுக்கு அறிவிப்புச்சாற்றி வருகிற ரயிலை நிறுத்துவது முடியாத காரியம்.

⁂

### வேலை நிறுத்தம்.

வேலை நிறுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஆறாயிரம் பேரிலிருந்து இதுகாறும் பன்னிராயிரம் பேர்வரை தொழில் நிறுத்தம் செய்திருக்கின்றனர். அரசாங்கத்தாரும் வெகுநிரம் சாதிக்கின்றனர். வேலைக்காரர்களுக்காக வீடுவீடாகவும். பிச்சை எடுக்கிறார்கள். கப்பல்களில் வந்த சரக்குகளெல்லாம் இறக்க ஒருவருமின்றி அப்படியே யிருக்கின்றன. நிலக்கரி இறக்குமதி செய்யும் கூலியாட்களும்நின்று விட்டனர். "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்"என்றாற்போல், வியாபாரிகள் சரக்குகள் இறக்குமதியாவதில்லை என்ற காரணத்தை யிட்டு, உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தப் பிரயாசிக்கின்றனர். தவிர நேற்று G. O. H. ஹோட்டலிலுள்ள வேலைக்காரர்களெல்லோரும் துரைமார்களுக்கு தீனிவழங்க மாட்டோமென்று மறுத்துவிட்டனர். சில சட்டசபை அங்கத்தினர் இரு கட்சியினரையும சமாதானஞ்செய்ய முயலுகின்றனர். பின் என்ன நேரிடுமோ அறிகிலேம்.

⁂

### தீ

9-3-23 ல் கொழும்பு துறைமுகத்திலுள்ளவியாபாரக்கப்பலொன்றில்நெருப்புப் பற்றினதின் மூலமாய் நெருப்பணைக்கும் யந்திரங்கள் கூடியவரை பிரயாசப்பட்டும், அதில் ஏற்றியிருந்த பருத்திவகை சாமான்கள் பூராவும் சேதமாயின. அநேக ஜனங்கள் துறை முகத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

⁂

### கால நிலை.

கதிரவன் வெகு கடோமாய் கதிர்களை வீசுகின்றான்- வருணன் என்பான் மறைந்தே போய்விட்டான். இதற்குள் அம்மை இலங்கை முழுவதிலும் உலாவி வருகிறான். இதையிட்டு நாட்டுக்குடியில் யாவருக்கும் சட்டாயமாய் அம்மையைக் கைகளில் செலுத்தி விடுவதாகத் தெரிவி.


நமது மித்திரன்

## போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை, நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூடு தண்டுப்பத்து,மிருஸ்தார் ஸ்ரீமான் சோ சேல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்விளை திருநெல்வேலி ஜில்லா, (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுநாடான் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினார் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுநாடான்குடியிருபபு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுநாடான்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection